விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 03 திங்கட்கிழமை (16.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

## தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில்
## மாபெரும் இளைஞர் மாநாடு
### விசேட செயலணி களத்தில்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் இளைஞர் மாநாடு ஒன்று மிக விரைவில் நடைபெறவுள்ளது. வடமாகாணத்து இளைஞர்களை முதன்மைப்படுத்தி யாழ்ப்பாணத்தில் இளைஞர் மாநாடு ஒன்றை நடத்துவதற்கான விசேட செயலணி ஒன்றும் தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஊழல் அற்ற அரசியல் என்ற தொனிப்பொருளில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெறும் இளைஞர்மாநாட்டில்வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இளைஞர்களை திசைமுகப்படுத்தும் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு புதிய சிந்தனையை ஏற்படுத்தி அதன் ஊடாக வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், தமிழ் பண்பாடு மற்றும் கலை, கலாசார விழுமியங்கள் என அனைத்து தளங்களிலும் இளைஞர் 23

## கலாஓயா பெருக்கெடுத்ததால் போக்குவரத்து தடை

(மன்னார்)

கலாஓயா பெருக்கெடுத்ததன் காரணமாக புத்தளம் பழைய எலுவங்குளம் பாதையின் போக்குவரத்து நேற்று மாலை முதல் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வனாத்தவில்லு 23

## பொதுநலவாய மாநாடு இன்று லண்டனில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பொதுநலவாய மாநாடு இன்று லண்டன் நகரில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் குறித்த மாநாடு எதிர்வரும் 21ஆம் திகதி வ்வரையில் நடைபெற 23

## தமிழர் அரசியலில் தமக்கு சார்பானவரையே வைத்திருக்க பிரதமர் ரணில் விரும்புகிறார்!
### மனோ கணேசன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழர் அரசியலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவானவர்களையே வைத்திருப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரும்புவதாக தேசிய சக வாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற



ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.தே.க தமக்கு சார்பானவர்களை தான் வடக்கு அரசியலில்வைத்திருக்கின்றது. இதே போன்று தான் எமது கட்சியும் இலங்கை 23

## தமிழர்களுக்கான சர்வஜன வாக்கெடுப்பு கோரி போராட்டம்

(கொழும்பு)

கனடாவில் நடைபெறவுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின், இலங்கைத் தமிழர்களுக்கான சர்வஜன வாக்கெடுப்பு போராட்டத்தில் ஐக்கிய நாடுகளின் முன்னாள் உதவி செயலாளர் அட்ரினெஸ் மெல் 02

## சம்பந்தனுக்கு எதிரான பிரேரணை அடுத்த மாதம்



### கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிரான் நம்பிக்கை இல்லா பிரேரணையை அடுத்த மாதம் கொண்டுவர தீர்மானித்துள்ளதாக ஒன்றிணைந்த 23

## அரசாங்கத்தை கண்டிப்பதில் பயனில்லை; அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டும்
### சித்தார்த்தன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வெறுமனே அரசாங்கத்தை கண்டிப்பதால் நடக்கப்போவது ஒன்றுமில்லை.

அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் சிந்திக்கும் நிலைக்குச் சென்றுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணமால் போனோர் 23



## 10 இலட்சத்திற்கு மேற்பட்ட
## புலம்பெயர் உறவுகளை தாயகம் அழைக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை
### முதல்வர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இந்தியா உட்பட பல நாடுகளுக்கு அகதிகளாக புலம்பெயர்ந்து சென்றுள்ள 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்களை மீள தாயகத்திற்கு அழைப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க அரசு தவறியுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார். 23

## கீத் நொயார் கடத்தல் சம்பவம்:
## தொலைபேசி அழைப்பு பதிவுகளால் சிக்கிய புலனாய்வு அதிகாரி

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவுக்கு இருந்த தொடர்புகளை, தொலைபேசி தொடர்புகளின் மூலமே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்தனர் என்று 23

## மூன்று இலட்சம் கையெழுத்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஆயுள் தண்டனை பெற்றுள்ள தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக் கோரி இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தால் சேகரிக்கப்பட்ட மூன்று இலட்சம் கையெழுத்துக்களைக் கொண்ட மகஜர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நாளை அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதன் ஏற்பாடாக நாளை 17ஆம் திகதி பிற்பகல் 12.30 மணி 23

## காலநிலை காரணமாக டெங்கு அபாயம்

(கொழும்பு)

தற்போது நிலவும் காலநிலை காரணமாக நாட்டில் டெங்கு நோய் பரவும் வீதத்தில் 23

## கரணவாயில் குழுக்களிடையே மோதல்; நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

கரணவாய் பகுதியில் இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதுவருட தினத்தன்று கரணவாய் சோழங்கன் பகுதி இளைஞர்களிற்கும், மலையான்தோட்ட இளைஞர்களிற்கிடையில் தகராறு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கியுள்ளனர்.

இதில் ஒருபகுதியைச் சேர்ந்தோர் தென்மராட்சி மந்து 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இம்முறை புத்தாண்டில் அனர்த்தங்கள் குறைவு

(கொழும்பு)

இம் முறை புத்தாண்டு தினத்தின் போது பட்டாசு மூலம் ஏற்படும் அனர்த்தம் குறைவடைந்துள்ளதனை காணமுடிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு தேசிய மருத்துவமனை இதனை தெரிவித்துள்ளது.

கடந்த 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவுக்கு 379 பேர் அழைத்து வரப்பட்டதாக தேசிய பயிற்சி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதேபோல் புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற உந்துருளி விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து 8 இடங்களில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய திருக்கோவில், பிடிகல, மெதிரிகிரிய, கிராதுருகோட்டை, வெலிகந்த, வலஸ்முல்ல, சூரியவேவ மற்றும் மொரகொடை பிரதேசங்களில் குறித்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

குறித்த விபத்துக்களில் உயிரிழந்தவர்களில அதிகமானவர்கள் இளைஞர்கள் என பொலிஸ ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. (மு-1)

## தமிழர்களுக்கான...

காட்டே பங்கேற்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யெஸ் ரெபரன்டம் என்ற பெயரில் இந்த போராட்டம் நடத்தப்படவுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த போராட்டத்தை தொடர்ந்து தமது கோரிக்கையை வலியுறுத்தி சர்வதேச ரீதியில் இலங்கைத் தமிழர்களுக்கான சர்வஜன வாக்கெடுப்பை கோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை தமிழர்களுக்கான நிரந்தர தீர்வை வலியுறுத்தும் வகையிலேயே இந்த போராட்டம் அமைவதாகவும் குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக 1958, 1977, 1983 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் பாரிய கொலைச் சம்பவங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் இவ்வாறான வன்முறைகளின் பின்னர் சர்வஜன வாக்கெடுப்புக்கள் மூலம் பல நாடுகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சேபியன்-மோன்டேனேகிரின் உடன்பாடு, பப்புவா நியூகினி-போகெய்ன் வில்லி சமாதான உடன்பாடு, கிழக்கு திமோர், ஸ்கொட்லாந்து, கொசோவோ, தென்சூடான், கியுபெக் போன்ற இடங்களிலும் சர்வஜன வாக்கெடுப்பு மூலமே பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாக குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (மு-1)

### இனப்பிரச்சினை உள்ளக விவகாரம்

# ஜனாதிபதி விளக்கமளிக்க லண்டனில் ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான போராட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை அல்லது சர்வதேசத்தின் கணிசமான கவனத்தை ஜெனிவா மனித உரிமை கொண்டு வந்துள்ளது.

ஆனாலும் மைத்திரி- ரணில் நல்லாட்சி அரசாங்கம், முடிந்த வரை இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச தலையீடுகளை தவிர்க்கும் ஏற்பாடுகளை செய்துள்ளதாக, கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி தெரிவிக்கப்படுகிறது.

2010ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்ட, நிபுணர்குழுவின் அறிக்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு 1948ஆம் ஆண்டில் இருந்து கூறப்படுகின்றது.

ஆனாலும், அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, எதிர்காலத்தில் சர்வதேசம், இலங்கை மீது நடவடிக்கை எடுக்க முடியாதவாறு, தீவிரமான இராஜதந்திர அணுகுமுறைகளை நல்லாட்சி அரசாங்கம் கையாண்டு வருவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு லண்டன் சென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இனப்பிரச்சினை விவகாரத்தில், சர்வதேச நாடுகள் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்பது குறித்தும் ஜெனிவா மனித உரிமைச் சபையின் தீர்மானங்கள் அவசியமற்றவை எனவும் வெளியுலக இராஜதந்திரிகளுக்கு எடுத்துக் கூறுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் மூத்த அரசியல் ஆலோசகர்கள் சிலர் ஜனாதிபதியுடன் லண்டன் சென்றுள்ளதாகவும், அங்கு நடைபெறவுள்ள சிறிய கூட்டங்களில், அவர்கள் இது குறித்து விளக்கமளிப்பார்கள் என்றும் உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக குறித்த தரப்புக்கள் தெரிவித்தன. (மு-1)

# சந்நிதியில் இருந்து திரும்பியோர் மீது கோடரி வெட்டு-இருவர் படுகாயம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலுக்குச் சென்று திரும்பியவர்களை வீதியில் நின்ற குழுவொன்று கோடரியால் வெட்டியதில், இருவர் காயமடைந்தனர். தலை மற்றும் கைகளில் வெட்டுக்காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதாரமருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவும் மண்டான் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த சிறிதரன் சிறிப்பிரபு (வயது -20), மந்துவில் கிழக்கைச் சேர்ந்த துரைமணி சயிந்தன் (வயது- 27) ஆகியோரே வெட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (மு-1)

# எரிபொருள்களின் விலை அதிகரிப்பு இருவாரங்களில் தீர்மானம்-நிதியமைச்சு

இலங்கை கனிய வள கூட்டுத்தாபனத்தின், எரிபொருள் விலையை தீர்மானிக்கும் விலை சூத்திரம் எதிர்வரும் இரு வார காலப் பகுதிக்குள் அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கப்படவுள்ளது.

நிதியமைச்சு இதனை தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை மாற்றத்திற்கு ஏற்ப, 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருள் விலையில் மாற்றங்கள் ஏற்படும் வகையில் குறித்த விலைச்சூத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் வரியை குறைத்தல் அல்லது விலை சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை நிதியமைச்சிடம் முன்வைத்திருந்தது.

அந்த கோரிக்கைகளுக்கு அமைய நிதியமைச்சு விலைச் சூத்திரத்தை தெரிவு செய்தது.

இதேவேளை, தற்போது விலை சூத்திரம் தொடர்பில் நிதியமைச்சுக்கும் இலங்கை கனிய வள கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்று வருகிறது.

தற்போது வரை இலங்கை கனிய வள கூட்டுத்தாபனத்தில் பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு 14 தொடக்கம் 15 ரூபா வரையிலும், டீசல் லீற்றர் ஒன்றுக்கு 6 முதல் 9 ரூபா வரையிலும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு 48 ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், நாளொன்றுக்கு 38 மில்லியன் ரூபா நட்டம் இலங்கை கனிய வள கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (மு-1)

# மைத்திரி-மோடி விரைவில் சந்திப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக இந்திய அரசாங்கத் தரப்புத் தகவல்களை ஆதாரம் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இருவரும் இங்கிலாந்து செல்கின்றனர். இதன்போது அவர்கள் பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்திக்கவுள்ள நிலையில், அவர்களுக்கு இடையிலும் சந்திப்பொன்று நடைபெற வாய்ப்பிருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரித்தானிய பிரதமர் தெரேசா மேயுடன் எதிர்வரும் 19ஆம் திகதி சந்திப்பை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-1)

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் மகேஸ்வரன்

(கூட்டுறவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (14.04.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் பாசமிகு கணவரும் பவித்திரா (மருந்தாளர் - நுவரெலியா பொது வைத்தியசாலை), சுமித்திரா (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் - 2ஆம் வருடம்), பிந்துஜன் (சாவ. இந்துக் கல்லூரி - 2017 வர்த்தகப் பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சலசாதேவி, மயில்வாகனம், இராஜேஸ்வரி மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் அரியபுத்திரன், தேவாம்பிகை, சிவசுப்பிரமணியம், கோணேஸ்வரி, நாகேஸ்வரி, புவனேஸ்வரி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற தனபாக்கியம் மற்றும் சுந்தரலிங்கம், பாலேந்திரா ஆகியோரின் மைத்துனரும் பீதாம்பரம், செல்வராசா, காலஞ்சென்ற செல்வரத்தினம் (RE) மற்றும் சூரியகுமாரன், சிவயோகி, சகிலா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

தகவல்:- குடும்பத்தினர்
077 072 4471

(3640)

### தந்தையால் தாக்கப்பட்ட சிறுவன்

# கால்கள் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

(மல்லாவி)

ஏ9, வீதியில் உள்ள மாங்குளம் பொலிஸ நிலையப் பிரிவிற்குட்பட்ட நீதிபுரத்தில் மதுபோதையுடன் வீடு வந்த தந்தையினால் 11 வயதுடைய சிறுவன் ஒருவன் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டு இரண்டு கால்களும் முறிந்த நிலையில் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

நேற்றைய தினம் தனது வீட்டில் விளையாடி கொண்டிருந்த சிறுவன் மீது மதுபோதையுடன் வந்த தந்தை மூர்க்கத்தனமாக கையாலும், தடியாலும் தாக்குதல் மேற்கொண்டதால சிறுவனின் இரண்டு கால்களும் முழங்காலின் கீழே முறிந்ததுடன் முகத்திலும் காயம் அடைந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் மாங்குளம் நீதிபுரத்தில் வசிக்கும் கோகில கிருஷ்ணன்-இசைப் பிரியன் (வயது-11) என்ற சிறுவனே படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் வைத்தியசாலையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சம்பவம் தொடர்பில் வசாரணைகளை முன்னெடுத்து மாங்குளம் பொலிஸார் தாக்குதலை மேற்கொண்ட தந்தையை கைது செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-15)

# பேரம் பேசும் சக்தியை தமிழ் மக்கள் இழந்துவிட்டனர்

## அமைச்சர் மனோ கணேசன் யாழில் சுட்டிக்காட்டு

## சம்பந்தனும் விக்னேஸ்வரனும் இணைந்து பயணிக்க வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஒற்றுமையாக செயற்பட்டு தமிழ் மக்களுடைய அபிவிருத்தி அரசியல் இரண்டிலும் ஒன்றாக பயணிக்க வேண்டும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார். மேலும் ஆயுதப் போராட்டம் இன்மையால் தமிழ் மக்கள் பேரம்பேசும் சக்தியை இழந்துவிட்டனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தென்னிலங்கையில் வடக்கு பொருளாதாரம், மணி ஓடர் பொருளாதாரம் என்று கூறுவார்கள். தெற்கில் தமிழர்கள் சென்று அரச வேலை செய்து மணியோடர் அனுப்புவார்கள். இப்போது அந்த பொருளாதாரம் இல்லை. உண்டியல் பொருளாதாரம் தான் இருக்கின்றது. இவை இரண்டும் நீங்கி வடக்கு மாகாணம் சுயமாக தலைத்தோங்க வேண்டும் என்றால் எங்கள் இளைஞர்கள் முன்வர வேண்டும்.

எனினும் இளைஞர்களிடையே விரக்தி காணப்படுகின்றது. மதுபாவனை அதிகரிப்பு, விரும்பத்தகாத சில விடயங்களில் ஈடுபடுகின்றார்கள். எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையை அவர்கள் இழந்து விட்டார்கள். யாழ்ப்பாணம் தலைத்தோங்க வேண்டும் என்ற அக்கறை இலங்கை முழுவதுமுள்ள தமிழ் மக்களுக்கு உண்டு.

அவ்வாறு தலைத்தோங்க வேண்டுமென்றால் மீன்பிடி, சுற்றுலா, தொழில்நுட்பம் ஆகிய துறைகள் முன்னேற்றமடைய வேண்டும். எனினும் இவை திட்டமிட்டு வடக்கில் முன்னேற்றப்படவில்லை. வடக்கு மாகாண சபை, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இருந்தும் தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை.

அபிவிருத்தியும் அரசியலும் இரு கண்களாகும். அவை இரண்டுமே ஒன்றாக முன்னெடுக்கப்பட வேண்டும். எனினும் மக்கள் எதிர்பார்த்த அபிவிருத்திச் செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் முரண்பட்டு கொண்டுள்ளார்கள். இருவரும் தமது முரண்பாட்டை தீர்த்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும். யார் அரசியல் செய்வது, யார் அபிவிருத்தி செய்வது என்று இருவரும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும்.

ஆயுதப் போராட்டம் இன்மையால் தமிழ் மக்கள் பேரம் பேசும் சக்தியை தற்போது இழந்துள்ளார்கள். ஆயுதப் போராட்டத்தின் போது ஈழத்தை தவிர எதையும் தருவோம் என்று கூறிய சிங்களத் தலைவர்கள், தற்போது எதனையும் தரமாட்டோம் என்று கூறுகின்றார்கள். இவ்வாறு தான் எமது உரிமையைப் பெறும் நிலையுள்ளது.

எனது இரண்டாவது வீடு யாழ்ப்பாணம் தான். ஆகவே தமிழ் மக்களின் பிரச்சினைகள் உரிமைகள் பற்றி யாரும் எனக்கு கூறி தெரியவேண்டியதில்லை. யுத்தம் நடைபெற்றபோது கொழும்புக்கு வந்து அடைக்கலம் புகுந்த தமிழர்களுக்காக களமிறங்கியது நானும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ரவிராஜ்ஜும் தான். இதற்காக எனது நண்பன் ரவிராஜ் கொல்லப்பட்டான். நான் ஓடிவிடுவது ரவிக்கு செய்யும் துரோகமாகும் என்பதால் நாட்டைவிட்டு ஓடவில்லை. எனினும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருந்தேன்.

தமிழீழம் என்ற எண்ணப்பாட்டில் இருந்தவர்கள் தற்போது ஒரு நாடு என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளார்கள். இதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகவே தென்னிலங்கையில் உள்ளவர்கள் இனியும் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க பின்னடிக்கக் கூடாது.

தந்தை செல்வா தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்றார். அதன்பின்னர் அமிர்தலிங்கம் இந்தியாவை நம்பினார். எனினும் அப்போதும் தமிழ் மக்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் போராட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்து கூறியது. எனினும் நிரந்தரத் தீர்வை தரவில்லை. தற்போது சம்பந்தன் இந்தியாவை தாண்டி ஐ.நா. சென்று பேசி வருகின்றார். இதே போன்று தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கு புரிய வைக்கும் செயற்பாட்டில் நான் இறங்கியுள்ளேன் என மனோகணேசன் மேலும் தெரிவித்தார். (இ-4)

## 23 ஆம் திகதி முழுமையான அமைச்சரவை மாற்றம்

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும், அமைச்சரவை முற்றாக மாற்றியமைக்கப்படவுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட இழுபறிகளால் ஐ.தே.க அமைச்சர்கள் சிலரது பதவிகளில் மட்டும் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதையடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் ஆறு பேர் மற்றும் இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகினர். இந்த நிலையில், அமைச்சரவை சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக மாற்றியமைக்கப்படும் என்று கூறப்பட்டது.

எனினும் கூட்டு அரசாங்கத்தை முன்னெடுப்பது தொடர்பான உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதில் ஏற்பட்டுள்ள இழுபறிகளால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பிய பின்னரே அமைச்சரவை மாற்றியமைக்கப்படவுள்ளது.

பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி எதிர்வரும் 22 ஆம் திகதி நாடு திரும்புவார். அதன் பின்னர், எதிர்வரும் 23 ஆம் திகதி அமைச்சரவையில் மாற்றம் இடம்பெறும் என்று ஜனாதிபதி செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அமைச்சர் பதவியை இழந்த இரண்டு ஐ.தே.கவினருக்கு அமைச்சரவை மாற்றத்தின் போது, மீண்டும் பதவிகள் வழங்கப்படும் என்று ஐ.தே.கவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். அதே வேளை பதவி விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 6 அமைச்சர்கள், 4 இராஜாங்க அமைச்சர்கள், 5 பிரதி அமைச்சர்களுக்குப் பதிலாக, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

புதிய அமைச்சரவையில் ஐ.தே.கவைச் சேர்ந்த மேலும் மூவருக்கு அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர் பதவிகளை வழங்குவது குறித்து ஜனாதிபதியுடன் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தலைமையிலான ஐ.தே.க. குழுவினர் பேச்சு நடத்தியுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர்களான வசந்த சேனநாயக்க, பாலித ரங்கே பண்டார, வசந்த அலுவிகார ஆகியோருக்கே அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஐ.தே.க தரப்பில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (இ-7)

## 'மொறிஸ்' விடுவிக்கப்படவில்லை புலனாய்வு அதிகாரிகள் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மொறிஸ் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக வெளியாகிய தகவல்களை, சிரேஷ்ட புலனாய்வு அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானுக்கு மிகவும் நெருக்கமானவரான மொறிஸ், கொழும்பில் பல உயர்மட்டத் தாக்குதல்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்.

தற்போது தடுப்புக் காவலில் உள்ள அவர், நீதிமன்றத் தீர்ப்புக்காக காத்திருக்கிறார்.

மருத்துத்துறைப் பொறுப்பாளராக முன்னர் இருந்த மொறிஸ், இந்திய அமைதிப் படைக்கு எதிரான தாக்குதல்களிலும் பங்கேற்றவர்.

இவர் விடுவிக்கப்பட்டு விட்டார் என்று வெளியான தகவல்களில் உண்மையில்லை என்று சிரேஷ்ட புலனாய்வு அதிகாரிகள் சண்டே ரைம்ஸ் வார இதழுக்குத் தெரிவித்துள்ளனர். (இ-7)

## அரசியல் கைதிகளை விடுவிக்க இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு பிரித்தானியாவிடம் கோரிக்கை

(லண்டன்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கும் பிரித்தானியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என புலம்பெயர் தமிழ்அமைப்புக்கள் பிரித்தானியாவிடம் வலியுறுத்தியுள்ளன.

யுத்தம் இடம்பெற்ற போதும் அதனை அண்டிய காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர் விசாரணைகள் இன்றி நீண்டகாலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களும், அவர்களது குடும்பங்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அண்மையில் கூட அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் மனைவி மரணித்த நிலையில் அவரது இரண்டு பிள்ளைகளும் நிர்க்கதியாகியுள்ளனர்.

இந்த நிலையில், ஆனந்த சுதாகரன் உள்ளிட்ட அரசியல் கைதிகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்வதற்கும், இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கும் பிரித்தானியா இலங்கை அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என புலம்பெயர் அமைப்புக்கள் கோரியுள்ளன.

இதேவேளை, நேற்று ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய பிரதமரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றது. (இ-250)



## பெங்களூருவில் சிக்ஸர் மழை பொழிந்தார் சாம்ஸன்

# சொந்த மண்ணில் விராட்டின் பெங்களூரை புரட்டியெடுத்தது ராஜஸ்தான் றோயல்ஸ்

சஞ்சு சாம்சனின் காட்டடி துடுப்பாட்டமும் சரவெடி சிக்ஸர்களும் கைகொடுக்க, பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை 19 ஓட்டங்களால் வெற்றி கொண்டது ராஜஸ்தான் றோயல்ஸ்.

ரசிகர்களுக்கு வாணவேடிக்கை காட்டிய சாம்ஸன் 45 பந்துகளில் 92 ஓட்டங்கள் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இவரின் கணக்கில் 10 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கும்.

நாணயச்சுழற்சியில் தோல்வியுற்ற ஒரு அணி இந்த ஐபிஎல் சீசனில் வெற்றி பெறுவது இதுதான் முதல் முறையாகும். பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 3 போட்டிகளில் விளையாடி 2ஆவது தோல்வியைச் சந்தித்து 6ஆவது இடத்தில் உள்ளது. ராஜஸ்தான் அணி 3 போட்டிகளில் 2 வெற்றிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது.

அதிலும் பெங்களூர் அணியின் தூண்களான விராட் ஹோலி, டி வில்லியர்ஸ் விக்கெட்டுக்களை ராஜஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சாளர் கோபால் வீழ்த்தியது மிகப்பெரிய திருப்பு முனையாக அமைந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணியின் தலைவர் விராட் ஹோலி முதலில் களத்தடுப்பை செய்தார். பெங்களூர் அணியில் ஒரு மாற்றம் செய்யப்பட்டது. சர்பிராஸ் கானுக்கு பதிலாக பவான் நெகிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

ரஹானே, டார்ஸி ஷோர்ட் ஆட்டத்தைத் தொடங்கினர். அணித் தலைவர் ரஹானே அதிரடியான தொடக்கத்தை வழங்கினார். வோஷிங்டன் சுந்தர், உமேஷ் யாதவ், யுவேந்திர சாஹல் ஆகியோரின் பந்துகளை சிக்சர்களுக்கும், பவுண்டரிகளுக்கும் பறக்கவிட்டதால் ஓட்டவிகிதம் வேகமெடுத்தது.

ரஹானே 36 ஓட்டங்களுடன் வோக்ஸ் வீசிய 6ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். இவரின் கணக்கில் 6 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும். அடுத்த ஓவரில் ஷோர்ட் 11 ஓட்டங்களில் சாஹல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

3ஆவது விக்கெட்டுக்கு ஸ்ரோக்ஸ், சாம்ஸன் கூட்டணி ஓரளவுக்கு நிலைத்தது. 10 ஓவர்கள் முடிவில் ராஜஸ்தான் அணி 88 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

கேஜ்ரோலியா வீசிய 12 ஆவது ஓவரில் ஒரு சிக்சர், பவுண்டரி அடித்து ஓட்ட வேகத்தை உயர்த்திய ஸ்ரோக்ஸ், அடுத்த ஓவரில் சாஹலிடம் விக்கெட்டை பறிகொடுத்தார். ஸ்ரோக்ஸ் 27 ஓட்டங்களில் வெளியேறினார்.

4ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய ஜோஸ் பட்லர், சாம்சனுடன் இணைந்தார். அதன்பின் சாம்ஸன் அதிரடி ஆட்டத்தை கையாண்டார். 14ஆவது ஓவரில் பவான் நெகி வீசிய ஓவரில் சாம்ஸன் அடித்த பந்தை டி ஹொக் பிடியாக்க தவறவிட்டார்

அதிரடியாக மட்டையை சுழற்றிய சாம்ஸன் 36 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். அதன்பின் பெங்களூர் பந்துவீச்சாளர்கள் உமேஷ் யாதவ், வோக்ஸ், கேஜ்ரோலியா ஆகியோர் வீசிய பந்துகள் சிக்ஸர்களுக்கும் பவுண்டரிகளுக்கும் பறந்தன.

நிதானமாக துடுப்பெடுத்தாடிய பட்லர் 23 ஓட்டங்களில் வோக்ஸ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த திரிபாதி, சாம்ஸனுடன் சேர்ந்து அதிரடியை கையாண்டார். இருவரும் சேர்ந்து உமேஷ் யாதவ் வீசிய கடைசி ஓவரை நொறுக்கி ஓட்டங்களை அள்ளினர். திரிபாதி ஒரு சிக்ஸர், பவுண்டரி உள்ளிட்ட 10 ஓட்டங்களும் சாம்ஸன் 2 சிக்ஸர்களும் அடித்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் ராஜஸ்தான் றோயல்ஸ் 4 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சாம்ஸன் 92 (2 பவுண்டரிகள், 10 சிக்ஸர்கள்) திரிபாதி 14 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் பெங்களூரு சார்பில் சாஹல், வோக்ஸ் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

### கடின இலக்கு

218 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு மக்கலம், டிகொக் இணை ஆரம்பம் வழங்கியது. மக்கலம் 4 ஓட்டங்களில் கௌதம் சுழலில் வெளியேறினார். அடுத்து வந்த விராட் ஹோலி, டி ஹொக்குடன் இணைந்தார்.

அணியின் சூழலை உணர்ந்த விராட் ஹோலி, வழக்கான போர்ஃமில் அதிரடியில் இறங்கினார். குல்கர்னி வீசிய 3ஆவது ஓவரில் 3 பவுண்டரிகள் அடித்து ஹோலி அதகளப்படுத்தினார். டி ஹொக் நிதானமாக துடுப்பெடுத்தாடி அவ்வப்போது பவுண்டரிகள் அடித்தார். இதனால் ஓட்டவிகிதம் ஓவருக்கு 10 ஓட்டங்கள் என்ற வீதத்தில் உயர்ந்து வந்தது.

ஷோர்ட் வீசிய 8ஆவது ஓவரில் டி ஹொக் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து டி வில்லியர்ஸ் களமிறங்கினார். அதிரடியாக துடுப்பாட்டம் செய்த கோலி 25 பந்துகளில் அரைசசதம் அடித்தார். அதன்பின் நீண்ட நேரம் நிலைக்க வில்லை.

கோபால் பந்துவீச்சில் விராட் ஹோலி 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் கணக்கில் 4 பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கும்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டி வில்லியர்ஸ் 20 ஓட்டங்களில் கோபால் பந்துவீச்சில் பெவிலியன் திரும்பினார். பவன் நெகி 3 ஓட்டங்களில் வெளியேறினார்.

மன்தீப் சிங், வோஷிங்டன் சுந்தர் ஓரளவுக்கு நிலைத்து ஆடி நம்பிக்கை அளித்தனர். உனத்கட், வோக்ஸ், லோஹ்லின் ஆகியோர் பந்துகளில் வோஷிங்டன் சுந்தர் அபாரமாக சிக்ஸர்கள் அடித்தார். அதிரடியாக ஆடிய சுந்தர் 19 பந்துகளில் 35 ஓட்டங்கள் சேர்த்து ஸ்ரோக்ஸ் வேகத்தில் போல்டாகினார்.


மன்தீப் சிங் கடைசி ஓவரில் ஹட்ரிக் பவுண்டரி அடித்தும் வெற்றிக்கான ஓட்டங்களை அடைய முடியவில்லை.

இறுதியில் பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. மன்தீப் 47 ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் றோயல்ஸின் வெற்றிக்கு வித்திட்ட சாம்ஸன் தெரிவானார்.




# பொதுநலவாயத்தில் சாதித்தது இந்தியா



பொதுநலவாய விளையாட்டின் கடைசி நாளில் பட்மின்டன் வீராங்கனை செய்னா தங்கம் வென்றார். ஒட்டுமொத்தமாக, இம்முறை இந்திய அணி 26 தங்கம் உட்பட மொத்தம் 66 பதக்கம் வென்றது.

அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் 21 ஆவது பொதுநலவாய விளையாட்டுக்கள் நடந்தது. இதன் பட்மின்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் இந்தியாவின் செய்னா, சக வீராங்கனை சிந்துவை எதிர்கொண்டார்.

முதல் செட்டை 21-18 என கைப்பற்றிய செய்னா, அடுத்த செட்டையும் 23-21 என வசப்படுத்தினார். முடிவில், செய்னா 21-18, 23-21 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இதன்மூலம், இம்முறை இரண்டாவது தங்கத்தை வசப்படுத்தினார். ஏற்கெனவே, அணிகளுக்கான கலப்பு இரட்டையர் பிரிவில் தங்கம் வென்றிருந்தார். பொதுநலவாய அரங்கில், 2010ஆம் ஆண்டுக்குப்பின் (டில்லி) இரண்டாவது முறையாக தங்கம் கைப்பற்றினார்.

### ஸ்ரீகாந்த் அசத்தல்

ஆண்கள் பிரிவு இறுதியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் 21-19, 14-21, 14-21 என மலேசியாவின் லீ வெய் சாங்கிடம் வீழ்ந்து வெள்ளி வென்றார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதியில் இந்தியாவின் சாட்விக், சிராக் ஜோடி 13-21, 16-21 என்ற நேர் செட் கணக்கில் இங்கிலாந்தின் மார்கஸ், கிறிஸ் ஜோடியிடம் தோல்வியடைந்து வெள்ளி கைப்பற்றியது.

### தீபிகா ஜோடிக்கு வெள்ளி

பெண்கள் இரட்டையர் ஸ்குவாஷ் பிரிவு இறுதியில் இந்தியாவின் ஜோஷ்னா, தீபிகா ஜோடி 9-11, 8-11 என நியூசிலாந்தின் ஜோலியா, அமானந்த் ஜோடியிடம் வீழ்ந்து வெள்ளி வென்றது.

### மணிகா ஜோடி அபாரம்

டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலத்திற்கான போட்டியில் இந்தியாவின் சத்யன், மணிகா ஜோடி 3-0 என சரத் கமல், மவுமா தாஸ் ஜோடியை வீழ்த்தியது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வெண்கலத்திற்கான போட்டியில் இந்தியாவின் சரத் கமல் 4-1 என இங்கிலாந்தின் சாமுவேல் வால்க்கைர வீழ்த்தினார்.

### 3

இம்முறை, இந்தியா 26 தங்கம், 20 வெள்ளி, 20 வெண்கலம் என மொத்தம் 66 பதக்கத்துடன் மூன்றாவது இடம்பிடித்தது. இதன் மூலம், பொதுநலவாய விளையாட்டு வரலாற்றில் 3ஆவது முறையாக அதிக பதக்கம் குவித்தது. இதற்கு முன், அதிகபட்சமாக டில்லியில் 101 (2010), மான்செஸ்டரில் (2002) 69 பதக்கம் வென்றிருந்தது. இம்முறை, முதலிரண்டு இடங்களில் முறையே அவுஸ்திரேலியா (198), இங்கிலாந்து (136) பிடித்தன.

### அடுத்து எங்கே?

இங்கிலாந்தின் பேர்மிங்காமில் அடுத்த (2022, ஜூலை 27-ஓக. 7) பொதுநலவாய விளையாட்டு நடக்கவுள்ளது.

# சென்னை முதல் தோல்வி



பஞ்சாப் அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் போட்டியில் சென்னை அணி 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்தியாவில் 11ஆவது ஐ.பி.எல்., சீசன் நடக்கிறது. மொகாலியில் நேற்று நடந்த 12ஆவது லீக் போட்டியில் சென்னை - பஞ்சாப் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பஞ்சாப் அணிக்கு ஹெய்ல், லோகேஷ் ராகுல் 'சுப்பர்' ஆரம்பம் வழங்கினர். ஹர்பஜன் வீசிய 4ஆவது ஓவரில் ராகுல் இரண்டு பவுண்டரி அடித்தார். சகார் பந்துவீச்சில் கெய்ல் இரண்டு சிக்சர், இரண்டு பவுண்டரி விளாசினார். புயல் வேகத்தில் ஓட்டங்கள் குவித்த இவர் 22 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். ராகுல் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். வோட்சன் 'வேகத்தில்' கெய்ல (63) ஆட்டமிழந்தார். தாகிர் 'சுழலில்' மயங்க் அகர்வால் (30), பின்ச் (0) சிக்கினர்.

யுவராஜ் 20 ஓட்டங்களில் திரும்பினார். அணித் தலைவர் அஷ்வின் 14 ஓட்டங்கள் எடுத்தார். பிராவோ பந்தில் கருண் நாயர் (29) ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் 7 விக்கெட்டுக்கு 197 ஓட்டங்கள் எடுத்தது. ஆண்ட்ரூ டை (3) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் சென்னை அணி சார்பில் அதிகபட்சமாக ஷர்துல் தாகூர், தாகிர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

பின் களமிறங்கிய சென்னை அணி 20 ஓவர்களில், 5 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களை எடுத்து 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அபாரமாக ஆடிய தோனி (79*) அரைச்சதம் கடந்தார். அம்பதி ராயுடு (49) ஓரளவு கைகொடுத்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக பஞ்சாபின் ஹெய்ல் தெரிவானார்.

# தென்னையில் தோன்றிய பிள்ளையார்



நெல்லியடி கொற்றாவத்தை அயிட்டியப்புலம் அல்வாய்மேற்கு பகுதியில் முருகன் பாலசிங்கம் என்பவரின் வீட்டில் தென்னை மரத்தில் பிள்ளையார் உருவம் தோன்றியுள்ளது. இதனை அதிகளவான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

# பண்டாரநாயக்க விமான நிலைய சில பகுதிகளின் பணி முடக்கம்




(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சில பகுதிக ளின் பணிகள் முடங்கியுள் ளன. குடிவரவு குடியகல்வு பகுதிகள் சில இவ்வாறு முடக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. சில பகுதிகளில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளதனால் வழமையான நடவடிக்கை களை மேற்கொள்ள முடி யாத நிலைமை ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால்பயணிகளுக்குஅசௌ கரியங்கள் ஏற்படக் கூடும் என தெரிவிக்கப்படுகிறது.(இ-7)

# புதுவருட தினத்தில் மண்வெட்டித் தாக்குதல் குடும்பஸ்தர் பலி, 5வயது சிறுமி காயம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் புத்தாண்டு தினத்தில் ஏற்பட்ட கைகலப்பில் 32 வயதுடைய குடும்பஸ்தர் மண் வெட்டித் தாக்குதலுக்கு இலக்காகி மரண மடைந் துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்த னர்.

இச்சம்பவத்தில் 5 வயதுடைய சிறுமி இருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரி வித்தனர். இச்சம்பவம் வாகரை கட்டுமுறிவில் இடம்பெற்றுள்ளது.

இராசையா சவுந்தராஜன் வயது 32 என்பவரே சம்பவத்தில் மரணமடைந்துள் ளார். காயமடைந்தவர்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மதுபோதையில் காணப்பட்ட இருவருக்கிடையில் வாய்த்தர்க் கம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பாகி அது கோஸ்டி மோதலாக மாறியது.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் தலைமறைவாகியுள்ள தாகவும் அவரை கைதுசெய்ய பொலிஸார் நட வடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மரணமடைந்தவ ரின் சடலம் மட்டக்க ளப்பு போதனா வைத் தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக் கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுள்ளதாக வும்தெரிவித்தனர் (இ-7)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப் பாக விற்பனை நிலையத்திற்கு கீழ்க் காணும் வெற்றிடங்கள் உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்.

Manager-40,000/- வரை
Bill Clark-25,000- வரை
Store Keeper-25,000/- வரை
Accountant-30,000/- வரை
உதவியாளர்கள்-20,000/- வரை
உதவி Technicians-25,000/- வரை

**தங்குமிடம் உணவு வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 077 771 0785**

**Satstech Engineers Pvt (Ltd) Colombo-13**

## மேலாளர் / எக்கவுண்டன் தேவை

யாழில் இயங்கிவரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக செயற்படக் கூடிய கணனி அறிவுள்ள பெண் அல்லது ஓய்வு பெற்ற ஆண் ஒருவர் தேவை. பொறுப்பாக செயற்படக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தொடர்பு: 077 771 0785**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி.**
**மகேஸ்வரன்**
**றெஜிந்தா**



ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உன்னை இழந்த துயரை நாம்
ஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றோம்
எம்மை அன்பாலும் பாசத்தாலும்
அரவணைத்த எம் தெய்வமே
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு: 20.05.1976
இறப்பு: 27.04.2017

கணவர்: K.மகேஸ்வரன்
மடத்தடி, சண்டிலிப்பாய், தொ.இல: 077 940 9720

(3622)

## இராசி பலன்

**16.04.2018**
சித்திரை 03, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
அமாவாசை முற்பகல் 8.03 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 4.12 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி, சுக், சந் | | |
| | | | ராகு |
| கேது | | | |
| சனி, செவ் | | குரு | |

சந்திராஷ்டமம்
உத்தரம்

வளவன்

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு,பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**இடபம்:** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதிக்க வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், உறவினர்களின் வருகையுண்டு.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியத்தில் வெற்றி பெறுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மகரம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கைகூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை ஏற்படும்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** குடும்பத்தில் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு.

# தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்விற்காக ஒன்றிணைவோம்

## அகிலதாஸ் வலியுறுத்து



(கரணவாய்)


கடந்த காலங்களில் கற்றுக் கொண்ட பாடங்களை மனதில் நிறுத்தி தமிழர் நாம் பேதங்களை மறந்து நிரந்தர அரசியல்தீர்வினை நோக்கிய பயணத்தில் ஒன்றிணைய வேண்டும்என வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் சிவக்கொழுந்து தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் நிபந்தனை அரசியல். இணக்க அரசியல். சாணக்கிய அரசியல் அனைத்தினையும் எம்மை ஆண்டுவந்த தலைமைகளுடன் எமது தமிழ்த் தலைமைகள் செய்து வந்தன. செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்வோ எட்டாக்கனியாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறான தற்போதைய காலகட்டத்தில் அரசியல் நீரோட்டத்தில் தற்போது நீந்திக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளின் தலைமைகள், மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்அனை வரும் ஒன்றாகி தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்வுக்காக மக்களின் குரலாக ஒலிக்க முன்வரவேண்டும்.

அதற்கான பயணத்தில் தானும் இணைந்துகொள்ள விரும்புவதாக தெரிவித்துள்ளார். (இ-60)





கொக்குவில் மேற்கு வாராஹி அம்மன் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன் தினம் இடம் பெற்றது. (படங்கள்:- புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)

## சித்திரைப் பரணி சங்காபிஷேக உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு-தல்லுடை கன்னியர் வைரவர் ஆலய சித்திரைப் பரணி சங்காபிஷேக உற்சவம்நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகும்.

விநாயகர், கன்னியர் வைரவர், முருகன், சந்தான கோபாலர், கௌரி அம்பாள் சமேத கேதார பரமேஸ்வரர் சேத்திர பாலகர் மூர்த்திகளுக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் விசேட பூஜைகள் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 6 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பஜனை, பேச்சு, நடன நிகழ்வுகள் நடைபெறும்.

இதேவேளை சைவப் புலவர் பிரசங்க பூஷணம் செ.கந்தசத்தியதாசன், சைவப்புலவர் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் சிவாசாரியார், ஆகமப் பிரவீனர் கிரயாரத்தினம் சிவஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாசாரியார் (பிரதமகுரு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்) ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்று இரவு 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று வைரவர் பெருமான் உள்வீதி வெளி வீதி வலம் வருவார். (இ)




## காவலரணில் கடமையில் பொலிஸ் உத்தியோகத்தர்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலுள்ள பொலிஸ்காவலரணுக்கு பொலிஸார் ஒருவர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

துன்னாலைப் பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதம் ஒன்றைத் தொடர்ந்து வைத்தியசாலையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் நிலையத்திற்கு மீள அழைக்கப்பட்டிருந்தார்.

இதனால் குறித்த காவலரணில்கடந்த எட்டு மாதங்களாக பொலிஸார் கடமையில் இருக்கவில்லை. இது தொடர் பில் பொது மக்களால் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில் அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதையடுத்து தற்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-60)

## தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 19. 20 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் நேர்முகத் தேர்வில் தோற்றும் யாழ்.மாவட்டத்தின் அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் சத்தியக் கூற்று தயாரிக்கும் முறை மற்றும் ஏனைய ஆவணங்கள் பெற்றுக் கொள்ளும் முறை தொடர்பாக மத்திய கல்வியமைச்சின் ஆலோசனை தொடர்பாக கலந்துரையாடவும் பயண ஒழுங்குகள் பற்றி கலந்துரையாடவும் கடிதங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் இன்று காலை 9 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறும் மேலும் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்களையும் சமுகமளிக்குமாறும் சங்கத் தலைவர் யோ.அருட்செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 077 437 9606, 076 854 9990 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (இ)

## க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகள்-2017

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

கே.தர்மிகன்-7ஏபிசி, எஸ்.கலையரசன்-6ஏபிசிஎஸ், கே.தர்ஷன்-6பி2சி, ஏ.யூடிற்றன்-4ஏபி3சிஎஸ், வை.ஆயித்தியன்-3சி5எஸ், ரி.கனிஸ்ரன்-4சி3எஸ், ஜீ.சாரங்கன்-5சி3எஸ், வி.ஜதீசன்-4பி3சிஎஸ், ஆர்.சாய்ராம்-2பி2சி4எஸ், ஆர்.பிரணவன்-2பி3சி2எஸ், கே.ஜெயந்தன்-பி3சி4எஸ், எஸ்.கௌரிதரன்-பி4சி2எஸ், ஜோ.பவிதிரன்-3சி5எஸ், எஸ்.சஸ்டிகிரீவன்-பி2சி5எஸ், எஸ்.அனோஜன்-4ஏ2பி2சி, ஆர்.மதுமிதா-3சி4எஸ், ஏ.சரணியா-ஏ4சி2எஸ், கே.சாலினி-ஏபிசி4எஸ், கே.நிவேக்கா-3ஏ2பி3எஸ், ஐ.இந்திரிக்கா-பி4சி3எஸ், வி.சயன்கா-3சி4எஸ், பி.சவ்ரியா-2பி3சி2எஸ், எஸ்.சங்கீத்தனா-2ஏபி2சி4எஸ், ஜே.வானுஜா-2பி2சி2எஸ், எம்.காயத்திரி-4சி2எஸ், யு.கேனுசா-3சி5எஸ். (இ-7)

## வழிகாட்டல் புத்தகங்கள் வழங்கல்



(கரணவாய்)

பருத்தித்துறைபிரதேசசபை உறுப்பினர் கு.தினேஸின் ஏற்பாட்டில் திக்கம் க.யோகானந்தனின் நிதி அனுசரணையில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் புத்தகங்கள் கொற்றாவத்தை அமெரிக்கன் கலைவன் பாடசாலையில் அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கு.தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-60)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 16. 2 | 31. 3 | 46. 3 |
| 2. 1 | 17. 2 | 32. 1 | 47. 4 |
| 3. 3 | 18. 1 | 33. 3 | 48. 4 |
| 4. 2 | 19. 3 | 34. 1 | 49. 2 |
| 5. 1 | 20. 2 | 35. 2 | 50. 4 |
| 6. 2 | 21. 3 | 36. 4 | 51. 3 |
| 7. 1 | 22. 1 | 37. 1 | 52. 1 |
| 8. 3 | 23. 3 | 38. 1 | 53. 3 |
| 9. 2 | 24. 2 | 39. 3 | 54. 3 |
| 10. 3 | 25. 1 | 40. 4 | 55. 2 |
| 11. 1 | 26. 3 | 41. 3 | 56. 4 |
| 12. 2 | 27. 2 | 42. 4 | 57. 2 |
| 13. 3 | 28. 2 | 43. 2 | 58. 3 |
| 14. 3 | 29. 3 | 44. 3 | 59. 1 |
| 15. 2 | 30. 1 | 45. 3 | 60. 3 |

பகுதி - II

(1) I. தூயகாற்று/ தூயநீர்/ தூய உணவு/ தூயசூழல்
II. நாம் வாழும் இல்லங்கள்
III. காற்று + ஓட்டம்
IV. சூழல்/ சூரியஒளி
V. தூய
VI. நோய் நொடிகள்

(2) I. உள்ளூராட்சி
II. நற்பணிகளைப்
(3) I. ஆனைறவு
II. வந்தனர்
III. சென்றான்
IV. போற்றுகின்றது







கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலை,கலாசார பிரிவினரின் ஏற்பாட்டில் நெல்லியடி பேருந்து நிலையத்திற்கு முன்பு போதைப்பொருள் ஒழிப்பு எனும் வீதி நாடகம் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் உதவி பிரதேச செயலர் ரஜீவ் கலந்து கொண்டார். (படங்கள்: மகாலிங்கம்)

# இலங்கைத் தமிழர்கள் திரும்பி வர வேண்டும்

## இந்தியாவில் வைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் அழைப்பு

(தென்காசி)

இலங்கைக்கு தமிழர்கள் திரும்பி வர வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

சித்திரை திருநாளை முன்னிட்டு நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் குறும்பலா மூலிகை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் நூல் வெளியீட்டு விழா, தயாரிப்புகள் அறிமுக விழா நடந்தது. இதில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஆளும் மத்திய அரசுக்கு பிரச்சினையில்லை என்று கூற முடியாது.

இரண்டு முக்கிய கட்சிகளும் சேர்ந்து ஆட்சி பொறுப்பை நடத்தி வருகின்றன. சமீபத்தில் நடந்த உள்ளாட்சி தேர்தலில் மத்தியில் ஆளும் கட்சிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டது. இதற்கு 2 கட்சிகளுக்கும் இடையே உள்ள பிரச்சினைகள்தான் காரணம் என மற்ற கட்சிகள் கூறி வருகின்றன. 2020 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஆட்சி நடத்த வேண்டும். அநேகமாக நடக்கும் என எதிர்பார்க்கிறேன்.

இருந்தபோதிலும், இலங்கையில் தற்போது மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ள நிலை மயக்க நிலைதான். கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கூறப்பட்டு வரும் கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்றித் தரவில்லை. வடகிழக்கு மாகாண தமிழ் மீனவர்களை தொழில் செய்யவிடாமல் சிங்கள மக்கள் தடை விதித்து வருகின்றனர்.

தமிழர்களுக்கான இடங்களை எல்லாம் சிங்கள மக்கள் ஆக்கிரமித்து விட்டதாக கூறி வருவதை விட, அரசே அதனை ஆக்கிரமித்திருப்பதாகத்தான் தெரிகிறது. இதற்காக மாற்று இடங்கள் கொடுக்கப்படும் என கூறிய போதிலும், இதுவரை வழங்கப்படவில்லை. எங்களுடைய மக்கள் திரும்பி வர வேண்டும் என்பதுதான் எங்களது விருப்பமாகும். பல இலட்சம் தமிழர்கள் வாழ்ந்து வந்த நிலையில், படிப்படியாக எண்ணிக்கை குறைந்து வருகிறது. பல்வேறு வெளிநாடுகள் மட்டுமன்றி, இந்தியாவிலும் ஒரு இலட்சம் தமிழர்கள் இருந்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் வடமாகாணத்திற்கு திரும்ப வர வேண்டும். ஏனென்றால் தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் பல்வேறு துறைகளில் சிங்களவர்கள் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இந்தியா-இலங்கை உறவை பொறுத்தவரை, முன்போல மிக நெருக்கமாக இருக்கிறது என கூற முடியாது. அதற்காக இரு நாடுகளுக்கு இடையே விரிசல் என்றும் சொல்ல முடியாது. சீனாவுடன் இலங்கை அரசு வெளிப்படையாக கொண்ட உறவை தொடர்ந்து இது எந்தளவில் இந்தியாவை பாதிக்கும் என்பது போகப் போகத்தான் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



## வடக்கு மாகாண சபையை கை கழுவிவிட்டது அரசு

### உறுப்பினர் சிவயோகன் விசனம்

(கரணவாய்)

முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்திருந்தால் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதியினைப் பெற நாங்கள் அர சாங்கத்தை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்படாது என வட மாகாண சபை உறுப்பினர் வி. சிவயோகன் தெரிவித்தார்.

வல்லிபுரம் சிங்கநகர் உதயசூரியன் முன்னேற்ற மன்ற சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் சனசமூக நிலையத் தலைவர் வி.ஜி.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

அபிவிருத்திக்காக முழுமையான நிதியினை எங்களால் வழங்க முடியவில்லை. மத்திய அரசாங்கத்தின் பாதீட்டின் மூலம் கிடைக்கும் சொற்ப நிதியினைக் கொண்டே வடமாகாணசபை நான்கரை வருடமாக சிறுசிறு அபிவிருத்தியைச் செய்துவருகிறது.

2014 இல் முதலமைச்சர் நிதியத்தை ஆமோதித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தோம். இதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கவில்லை. முதலமைச்சர் நிதியத்தினை அங்கீகரிக்காது யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டது போல சொற்ப நிதியினைக் கொண்டு உள்ள வேலையைப் பாருங்கள் என கைகழுவி விட்டுவிட்டது.

இதனால் நாங்கள் எதிர்பார்த்த வேலைத்திட்டத்தை செய்யமுடியவில்லை. அரசியல் நிலையில் த.தே.கூட்டமைப்பிற்கு சரிவு நிலை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

அதைத் தொடர்ந்து சரிய விடமுடியாது. இதற்கு நாங்கள் மட்டுமல்ல வெளிச்சூழ் நிலைகளும் சாதகமாக உள்ளது. செய்திகளை பத்திரிகைகள் உப்பு, புளி போட்டு வெளியிடுகிறது. இது போன்றதே உள்ளூராட்சி தேர்தலில் இரண்டு கோடிரூபா வாங்கியது என்ற விவகாரமும். த.தே.கூட்டமைப்பிற்குள் இருக்கும் பிரச்சினைகளை நாங்கள் கூட்டாக சேர்ந்து கதைத்து தீர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

## மாலை 6 மணிக்கு முன் கள்; நேர மாற்றத்தை ஏற்படுத்த தொழிலாளர்கள் கோரிக்கை

(கரணவாய்)

தவறணைகளுக்கு கள் வழங்கும் நேரத்தினை நீடிக்குமாறு சீவல் தொழிலாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பகுதியிலுள்ள கள் விற்பனை நிலையங்களில் மாலை வேளைக் கள்ளினை 6 மணிக்கு முன்னர் வழங்குமாறு சங்கங்கள் கோரியுள்ளன.

ஆனால் தற்போது அதிகரித்த வெப்பநிலை காரணமாக பனையில் அதிகளவான வெப்பம் உள்வாங்கப்படுவதனால் தொழில் செய்வதற்கு பனைகளில் ஏற முடியாத சூழ்நிலை காணப்படுவதாக தொழிலாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில் யாரும் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

இதேவேளை சீவல் தொழிலுக்கு சென்ற துன்னாலை தெற்கைச் சேர்ந்த கதிரமலை சிறிதரன் என்ற தொழிலாளி பிற்பகல் வேளையில் தொழில் செய்வதற்காக பனையில் ஏறிய போது தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.


அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள கடும் வெப்பநிலை காரணமாக பிற்பகல் தொழில் செய்வதற்காக பனைகளில் ஏறுவது கடினமாக உள்ளதால் மாலைக் கள்ளினை வழங்கும் நேரத்தை நீடிக்குமாறு தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)



கூட்டுறவு, சமூக, சமய, விளையாட்டு, அரசியல் ஆகிய துறைகளில் "ஞானஏந்தல்" செல்லையா இலகுநாதன் ஆற்றிய பணிக்காக அண்மையில் யாழ். இணுவில் மத்திய கல்லூரியில் சேவை நலன் பாராட்டு விழா இடம்பெற்றது.

# எங்களின் பூர்வீக வாழ்விடம் கோரிய போராட்டத்திற்கு முடிவுதான் என்ன?

## கேப்பாப்பிலவு மக்கள் மகஜர்கள் கையளிப்பு





(பனிக்கன்குளம்)

எமது பூர்வீகக் காணிகள் எப்போது முழுமையாக விடுவிக்கப்படும். எங்களின் வாழ்விட நியாயப் போராட்டத்திற்கு முடிவு என்ன? நிலம்மீட்புப் போராட்டம் ஒரு வருடத்தை தாண்டிய நிலையில் தமக்கு ஒரு முடிவு வேண்டுமெனக் கோரி பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவைத்தலை வரும் வடக்குமாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு மகஜர்களை கேப்பாப்பிலவு மக்கள் கையளித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

இராணுவத்தினர் சுவீகரித்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நில மீட்புப் போராட்டம் ஒருவருடத்தை தாண்டிய நிலையில் 414 ஆவது நாளாக நேற்றும் இராணுவ முகாமிற்கு முன் பாக கேப்பாப்பிலவு மக்கள் தமது போரா ட்டத்தை தொடர்ந்தனர்.

104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து கேப்பாப்பிலவு மக்கள் தொடர் போரா ட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப்பாப்பிலவு மக்கள் எமது பூர்வீக வாழ்விட நியாயப் போராட்டத்தின் முடிவு என்ன ? என்ற கேள்வியோடு பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை முதலமைச்சர் அவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு நேற்று மகஜர்களை கையளித்துள்ளனர்.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், தமிழரசு கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறிஸ் கந்தராஜா ஆகியோருக்கான மகஜர்களை பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் கையளித்ததோடு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மகஜர்களும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அம்மக்கள் தெரிவித்தனர்


அத்தோடு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் ஆகியோருக்கான மகஜர்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனிடம் கையளித்ததோடு ஏனைய உறுப்பினர்களுக்கான மக ஜர்க ளும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்

குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயமாவது, கேப்பாப்பிலவு பூர்வீக வாழ்விட வழித்தோன்றல் மக்களாகிய நாம் எமது வாழ்விடம் கோரி நீதி நியாயமான, உரிமையான கோரிக்கைகளை முன்வைத்து தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் கால்பதித்தபோது தாங்களும் இயன்றளவு முயற்சிகள் எடுத்து ஒரு தொகுதி வாழ்விடம் கிடைக்க செய்துள்ளீர்கள்.

எமது கோரிக்கைக்கு அமைவாக அரசினால் இதுவரை சாதகமான முடிவுகள் கிடைக்கப்பெறவில்லை. வீதியோரத்தை வீடாக்கி சொல்ல முடியாத துன்ப, துயர கஷ்டங்களை சுமந்து எமது பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும் என்ற தளராத மன உறுதியுடன் 414 நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் கால் பதித்து நிற்கும் எமக்கு பிரதிநிதிகளான் நீங்கள் என்ன முடிவு சொல்கிறீர்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-281)




## பொலிஸ் காவல் அரண் இனந்தெரியாத நபர்களால் சேதம்



(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு அருகே காணப்படும் பொலிஸ் காவல் அரண் நேற்று அதிகாலை இனந்தெரியாத நப்ர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது. வவுனியா மாவட்ட செயலகத்திற்கு அருகே காணப்பட்ட பொலிஸ் காவல் அரண் மீது சிரி-100 , பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் தாக்குதல் மேற்கொண்டதுடன் அதனை தூக்கி அருகே வீசிவிட்டு தப்பி சென்றுள்ளதாக சம்பவத்தை கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் இருப்பதால் சி.சி.ரி.வி காணொளியின் உதவியுடனும் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

## குளத்தின் நீரேந்து பிரதேசம் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டு வேலி அடைத்து மண் நிரப்பல்



(பரந்தன்)

கிளிநொச்சி குளத்தின் பின்புறமாக காணப்படுகின்ற டிப்போ இரத்தினபுரம் வீதியின் இடது புறமாகவுள்ள குளத்தின் நீரேற்ற பிரதேசம் சட்ட விரோதமாக சிலரால் பிடிக்கப்பட்டு வேலிகள் அமைத்து மண் நிரப்பப்பட்டு வருவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் அளவைவிட தற்போது மேலும் அதி களவான பிரதேசங்கள் வேலியிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட் டுள்ளன.

குறித்த பிரதேசம் நீர்ப்பாசனத் திணைக் களத்திற்கு சொந்தமான குளத்தின் நீரேந்து பிரதேசம் ஆகும்.

குளத்தின் பின்பகுதியும் மற்றும் கரையோர பகுதிகளும் நாளுக்கு நாள் ஆக்கிரமக்கப்படுவது என்பது எதிர்காலத்தில் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும் கிளிநொச்சி நகரிற்கு மிக அருகில் இருக்கும் குளம் என்பதனால் இந்த பாதிப்பு நகருக்கும் ஏற்படும் என்றும் சூழலியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2.312)

## கத்திக்குத்துக்கு இலக்கானவர் வைத்தியசாலையில் அனுமதி

(பனிக்கன்குளம்)

வவுனியா சிதம்பரபுரத்தில் புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மற்றையவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவருக்கிடையே இடம்பெற்ற கருத்து முரண்பாடே இச்சம்பவத்திற்கு காரணமெனவும் இச்சம்பவத்தில் காயமடைந்த சிதம்பரபுரம் கற்குளம் படிவம் -4 ஐச் சேர்ந்த சசிகுமார் தியாகரட்ணம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்டவர் என சந்தேகிக்கப்படும் வவுனியா ஆசிக்குளம் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சிங்காரம் கனகரத்தினம் என்பவரை கைது செய்துள்ளதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-281)

## மன்னார் மாவட்டத்தில் மூன்று சபைகளை இழந்தமை கவலைக்குரிய விடயமாகும்

### சாள்ஸ் எம்.பி.தெரிவிப்பு

(மன்னார்)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சற்று பின்னடைவை சந்தித்துள்ளது. அதுவும் மன்னார் மாவட்டத்தினைப் பொறுத்த மட்டில் 3 சபைகளை இழந்தமை கவலைக்குரிய விடயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னார் நகரசபை, நானாட்டான் பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றியுள்ளது.

முசலிப் பிரதேச சபையானது முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசம் குறித்த சபை எமக்கு இழப்பல்ல. மிகுதியாகவுள்ள மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய இரண்டு சபைகளையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இழந்துள்ளது.

குறித்த சபைகளின் இழப்புக்கு காரணம் என்றால் மக்கள் குழம்பிப் போயுள்ளமையேயாகும். எமக்குள்ளே நாம் பிளவுபட்டதால் எமக்கான வாக்குகள் உடைக்கப்பட்டு, உறுப்பினர்கள் சிதறடிக்கப்பட்டு அது ஒருவனுவாக ஆட்சியமைக்க முடியாமல் போனதும் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளது.

முடிந்ததை கதைத்து பயனில்லை. இனியாவது தமிழ் மக்களின் பிரதி நிதிகளாக இருக்கின்ற வீடு, சைக்கிள், சூரியன், ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயலாற்ற வேண்டும்.

அத்தோடு அடுத்த தடவை அனைத்து சபைகளையும் கைப்பற்ற வேண்டும். இம்முறை வெற்றிபெற்ற அனைத்து உறுப்பினர்களிடமும் மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இனம், மதம், மொழி வேறுபாடுகள் இன்றி எல்லா மக்களினதும் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் தங்கள் ஒவ்வொருவரினதும் சேவை அமையட்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

# முல்லை. மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு முதற்கட்டமாக 68 மில்லியன் ரூபா நிதி

## அரச அதிபர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட 318 மில்லியன் ரூபா நிதியில் முதற்கட்டமாக 68 மில்லியன் நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பெருந்தொகையான நிதி தேவைப்படுவதுடன், மக்களின் வாழ்வாதாரம் வீடமைப்பு, உட்கட்டுமான வசதிகள்,ஏற்படுத்தப்படவேண்டிய தேவைகள் காணப்படுகின்றன.

மீள்குடியமர்வை அடுத்து தொடர்ச்சியாக வருடாந்தம் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக 318 மில்லியன் ரூபா நிதி இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்முதற் கட்டமாக 68 மில்லியன்ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அதாவது, இவ்வாண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 156 அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதில் 65 வீதமான திட்டங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டும் 18 வீதமானவை கடற்றொழிலை மையமாக வைத்தும் முன்னெடுக்கப்படவுள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 55 செயற்றிட்டங்களும், மாந்தை கிழக்கில் 21 செயற்றிட்டங்களும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 29 செயற்றிட்டங்களும், துணுக்காய் பிரதேசத்தில் 16 செயற்றிட்டங்களும், முல்லைத்தீவு நகரத்தை மையமாகக்கொண்டு 35 செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக பல்வேறு அமைச்சுக்கள் ஊடாக 318 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் குறித்து நான்கு கட்டங்களாக இந்தநிதி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைவாக முதற்கட்டமாக 68 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது எனக் குறிப்பிட்ட அவர், மொத்த ஒதுக்கீடான 318 மில்லியன் ரூபா நிதியில் 162 மில்லியன் ரூபா நிதியை மீள்குடியேற்ற அமைச்சு ஒதுக்கியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)


## சித்திரைப்புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் சித்திரைப்புத்தாண்டு விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

தமிழ்-சிங்கள புத்தாண்டு விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

அன்றைய தினம் காலையில் ஆண்,பெண்களுக்கான மிதிவண்டி ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, கிறிஸ்மரம் ஏறுதல், தலையணைச சண்டை, முட்டியுடைத்தல், வினோத உடை அணிதல்,கோலம் போடுதல், கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளதுடன் இதில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. இரவு நிகழ்வுகளான சங்கீத நிகழ்வு நடன நிகழ்வுகளுடன் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகம் அறிவித்துள்ளது. (2-281)




# கமநல அபிவிருத்தி வேலைகள் இவ்வாண்டு 132 மில்லியன் ரூபா நிதியில் முன்னெடுப்பு

## கிளிநொச்சி மாவட்ட கமநல திணைக்களத் தகவல்படி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமநல அபிவிருத்திக்கு இவ்வாண்டு 132.6 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்டகமநல திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தியை கருப்பொருளாகக் கொண்டு பல்வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக இவ்வாண்டு சிறிய நீர்ப்பாசனக்குளங்களை புனரமைப்பதற்கு 45 மில்லியன் ரூபாவும் கமநலசேவை நிலையத்தின் திருத்த வேலைகளுக்காக 2.60 மில்லியன் ரூபாவும் மாவட்ட காரியாலயத்தினுடைய அபிவிருத்தி வேலைகளுக்காக 5 மில்லியன் ரூபாவும், கமத்தொழில் ஊடாக கைவிடப்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்பதற்கு 15 மில்லியன் ரூபாவும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சினூடாக சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்பதற்கு 50 மில்லியன் ரூபாவும் மாவட்ட காரியாலயத்தின் கட்டுமானங்களுக்கு 5 மில்லியன் ரூபாவும், மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்திக்கு 10 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், உலக உணவுத் திட்டத்தினால் இரண்டாயிரம் மனித நாட்களில் சிறிய நீர்ப்பாசனங்களின் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பதற்கான ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது என மேற்படி திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (2-315)

# காஞ்சிபுர மக்களின் தேவைகள் குறித்து ஆராய்ந்தார் சிறிதரன் எம்.பி



(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் கிராம மக்களின் தேவைகள் குறித்து நேரில் சென்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆராய்ந்ததுடன் மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

காஞ்சிபுரம் கிராமத்தில் வாழும் மக்கள் தமக்கான அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கவனத்திற்குக்கொண்டு வந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்துள்ளதுடன், அப்பகுதியில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட குழாய் கிணறுகளை அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2-315)

# மூன்று வைத்தியசாலைகள் நிரந்தர வைத்தியசாலைகளின்றி இயங்குகின்றது

## பின்தங்கிய பிரதேசம் என்பதால் இந்நிலை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் தேவையென்பதைத் தொடர்ந்தும் காட்டி வருகின்றோம்.

ஆனால் பின்தங்கிய பிரதேசங்கள் என்பதால் வைத்தியர்கள் இங்கு வருவதற்கு விரும்புவதில்லை என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு,நட்டாங்கண்டல் வைத்தியசாலை துணுக்காய் வைத்தியசாலை,ஐயன்கன்குளம் வைத்தியசாலை ஆகிய மூன்று வைத்தியசாலைகளுக்கும் வைத்தியர்கள் நியமிக்கப்படாது கடந்த மூன்று மாதங்களாக நிரந்தர வைத்தியர்கள் எவரும் இல்லாத நிலையில் குறித்த வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

இவ்விடயம் தொடர்பில் கடந்த வாரம் துணுக்காய்,மாந்தைகிழக்கு ஆகிய பிரதேசங்களில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின் போது, இதற்குப் பதிலளித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பொறுப்பு வைத்தியர் மேற்படி மூன்று வைத்தியசாலைக்கும் வைத்தியர்கள் தேவையென்பதை சுட்டிக்காட்டி வருகின்றோம்.

பின்தங்கிய பிரதேசங்கள் என்பதால் வைத்தியர்கள் இங்கு வருவதற்கு விரும்புவதில்லை. இருந்தாலும், தற்போது வைத்தியத்துறையில் படிப்பை முடித்திருக்கின்ற வைத்தியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இவ்வாறு வைத்தியர்கள் கிடைக்கும் பட்சத்தில் தற்காலிகமாகவே இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அத்துடன், ஐயன்கன்குளம்,நட்டாங்கண்டல் ஆகிய வைத்தியசாலையின் நோயாளர் காவுவண்டிகள் சேவைகளில் ஈடுபட்டுவருவதனால் அங்கும் வரும் நோயாளிகளை உடனடியாக மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை வழங்கக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# துணுக்காய் பிரதேசத்தில்

## 610 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 311 மாற்றுத் திறனாளிகளும் குடியேற்றம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் 610 வரையான பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக பிரதேச செயலகப்புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 20 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மூவாயிரத்து 942 குடும்பங்களைச் சேர்ந்த 12ஆயிரத்து 227 பேர் மீள்குடியேறியிருக்கின்றனர்.

இவர்களில், 610 பெண்தலைமைத்துவக்குடும்பங்கள் காணப்படுகின்றன.


இதேவேளை 311 வரையான மாற்றுத்திறனாளிகளும் காணப்படுவதாக மேற்படி பிரதேச செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத்திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# விளம்பி வருட இராசி பலன்கள்

## 14.04.2018-13.04.2019

# வழிபாட்டால் வளர்ச்சி!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



விளம்பி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே செவ்வாய்- சனி சேர்க்கைப் பெற்றுள்ளது. இராசிநாதன் குரு வக்ரம் பெற்றிருக்கிறார். 2இல் கேது, 8இல் ராகு இருக்கிறார்கள். பஞ்சம ஸ்தானத்தில் சூரிய-சுக்ர சேர்க்கை இருக்கிறது. சுக ஸ்தானத்தில் புதன் நீச்சம் பெற்று சந்திரனோடு இணைந்திருக்கிறார். இத்தனைக்கும் மத்தியில் பிறக்கும் புத்தாண்டு துன்பங்களை விலக்கி இன்பங்களைக் கொடுக்கவேண்டுமானால் இறைவழிபாடு உங்களுக்குத் தேவை. வருடத் தொடக்க கிரகநிலைகளை, உங்கள் சுய ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அதற்குரிய பலன்களை அறிந்து, பரிகாரங்களை செய்து கொள்ளுங்கள். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் பாதிப்புகளிலிருந்து ஓரளவு விடுபட இயலும்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதாலும், சனிக்கிழமையன்று புத்தாண்டு பிறப்பதாலும் இந்த ஆண்டு முழுவதும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வீடு மாற்றம், நாடுமாற்றம், இடமாற்றம் போன்றவை திருப்திகரமாக அமையாது. நண்பர்கள் பகையாகலாம். நல்ல வாய்ப்புகள் வந்து கைநழுவிப் போகலாம். உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு வீண்பழிகளும், விரயங்களும் ஏற்படலாம். யாருக்கும் பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. எதிரிகளின் பலம் கூடும் இந்த நேரத்தில் எச்சரிக்கை தேவை.

### குரு பார்வை பலன்!

ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் உங்கள் இராசிக்குலாப ஸ்தானம் எனப்படும் 11ஆம் இடத்தில் வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். எனவே லாபம் இருந்தாலும், செலவுகள் கூடும். அந்த குரு பகவானின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகிறது. பார்க்கும் இடங்களைப் பலப்படுத்தினால் வாழ்க்கை வளமாக அமையும்.

3ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால், சகோதரர்கள் பிரியமாக நடந்து கொள்வர். அவர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் கூட விரும்பிவந்து இணைவார்கள். மாற்றங்களெல்லாம் மனதிற்கு பிடித்த விதத்தில் அமையும். வழக்குகளில் திடீர் திருப்பம் ஏற்படும்.

5ஆம் இடத்தை குரு பார்ப்பதால், பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். எண்ணற்ற பிரச்சினைகளில் சிக்கியிருந்த உங்களுக்கு குரு பார்வையால் விடிவு காலம் பிறக்கப் போகிறது. கட்டியவீட்டைப் பழுதுபார்க்கும் யோகம் உண்டு. பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் அகலும். அதன் மூலம் கிடைத்த சொத்துகளை விற்றுவிட்டுப் புதிய சொத்துகள் வாங்க முயற்சிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களில் யாருடைய பெயரில் வாங்கினால் சொத்துகள் நிலையாக இருக்கும் என்பதை அறிந்து வாங்குவது நல்லது. பொதுவாக பஞ்சம ஸ்தானம் வலுப்பெறும் பொழுது நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும்.

குருவின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால், கல்யாண வாய்ப்பு கைகூடும். பல மாதங்களாக பேச்சுவார்த்தையிலேயே இருந்த வரன்கள் இப்போது கைகூடலாம். மங்கல ஓசை வெகுவிரைவில் இல்லத்தில் கேட்கப் போகிறது. உங்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றுவது குரு பகவானின் பார்வைதான். அப்படிப்பட்ட குரு பகவான் வக்ர இயக்கத்தில் இருந்தால் கூட பார்வைக்கு பலன் உண்டு. கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். உங்கள் சொல்லுக்கு மதிப்பு கூடும்.

### செவ்வாய்-சனி சேர்க்கையும், பார்வையும்!

14.4.2018 முதல் 29.4.2018 வரை தனுசு இராசியில் செவ்வாய் சனி சேர்க்கை ஏற்படுகிறது. அதன் பிறகு 20.3.2019 முதல் 13.4.2019 வரை செவ்வாய் சனியைப் பார்க்கும் அமைப்பு உள்ளது. இக்காலத்தில் கூடுதல் கவனம் தேவை. விரயாதிபதி செவ்வாய் பஞ்சம ஸ்தானாதிபதியாகவும் இருப்பதால், பிள்ளைகளால் பிரச்சினைகளும், விரயங்களும் ஏற்படலாம். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கும். சனி உங்கள் இராசிக்கு 2,3 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக இருப்பதால் கோபத்தால் பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாக இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள்.

### விருச்சிகத்தில் குரு!

விளம்பி வருட புரட்டாசி மாதம் 18ஆம் திகதி (4.10.2018) வியாழக்கிழமை அன்று, விருச்சிக இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிறார். இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்கு ஓரளவு நன்மைகளை வழங்கும். உங்கள் இராசிநாதனாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குருபகவான், கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர் என்பதால் இதுபோன்ற மறைவிடங்களுக்கு வரும் பொழுதும், வக்ர இயக்கங்களில் இருக்கும் பொழுதும் மிகுந்த நற்பலன்களை வழங்குவார். அந்த அடிப்படையில் இந்த காலம் ஒரு இனிய காலமாகவே அமையும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

தற்சமயம் 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருபகவானின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவாகிறது. வீடு, வாகனம், தாய், உடல்நலம் ஆதியவற்றைக் குறிக்கும் இடமான 4ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் வீடு, மனை வாங்கும் யோகம் ஒருசிலருக்கு வாய்க்கும். குடும்ப உறுப்பினர்களில் யாருடைய ஜாதகத்தில் செவ்வாய் பலம் நன்றாக இருக்கிறதோ அவர்கள் பெயரிலேயே வீடு வாங்கலாம். ஒரு சிலர் பூர்வீக இடத்திலேயே வீடு கட்டலாமா? என்று சிந்திப்பர். அங்ஙனம் கட்ட நினைப்பவர்கள் சுய ஜாதகத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியின் பலமறிந்து கட்டுவது நல்லது. தாய்வழி ஆதரவு உண்டு. பயணங்களால் பலன் கிடைக்கும்.

6ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் ஜீவன ஸ்தானம் பலம் பெறுகிறது. ஜீவன கவலை அகலப் புதிய வழி பிறக்கும். உத்தியோகத்தில் வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்துசேரும். வழக்குகளில் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்கும். கடன் சுமை குறையத் தொடங்கும். கொடுக்கல்-வாங்கல்கள் இனி திருப்திகரமாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் இனி எதிர்பார்த்தபடி வந்துசேரும். தொழில் புரிபவர்களுக்கு பழைய பங்குதாரர்கள் விலகினாலும், புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

குருவின் பார்வை அஷ்டம ஸ்தானத்தில் பதிவதால் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்துசேரும். பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். உங்களைக் குற்றம் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் தானாக விலகுவர்.




### ராகு-கேது பெயர்ச்சி!

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சிந்தித்து செயற்பட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி ஏற்படலாம். நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுதே, மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. மனக்குழப்பம் அதிகரிக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும் குறையும். தெய்வ வழிபாடும், திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளும் பாதிப்புகளை அகற்றும்.

சப்தம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணைவழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கலாம். புதியவர்களை நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். இடமாற்றம், ஊர்மாற்றம், நாடுமாற்றங்களை யோசித்து ஏற்றுக் கொள்ளுங்கள். ராகு-கேதுகளுக்கு முறையாகப் பிரீதி செய்தால் முன்னேற்றத் தடை அகலும்.

### வளர்ச்சிக்குரிய வழிபாடு!

வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியையும், சனிக்கிழமையன்று வாலில் மணி கட்டிய அனுமனையும் வழிபட்டு வாருங்கள். சிறப்பு வழிபாடாக வைரவன் பட்டியிலுள்ள பைரவர், வளரொளி நாதர், வடிவுடையம்மன், அறுபத்து மூவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வாழ்க்கை வளமாகும். வருங்காலம் நலமாகும்.

### குரு மற்றும் சனி வக்ர காலங்கள்!

உங்கள் இராசிநாதன் குரு கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவராக இருப்பதால், அவர் வக்ரம் பெற்றிருக்கும் காலம் உங்களுக்கு யோக காலமாகவே அமையும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அனைத்தும் மறையும். வீட்டிற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். தங்கம், வெள்ளி வாங்கும் யோகம் உண்டு. அசையாச் சொத்துகள் வாங்குவதிலும் ஆர்வம் கூடும். படிப்பிலிருந்த தடை அகலும். மேல்படிப்பைத் தொடரும் எண்ணம் ஏற்படலாம்.

சனி வக்ர காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும். விரயங்கள் அதிகரிக்கும். குடும்ப இரகசியங்களை மூன்றாம் நபரிடம் பகிர்ந்துகொள்ள வேண்டாம். கண், காது சம்பந்தப்பட்ட வகையில் தொல்லைகள் ஏற்பட்டு அகலும். இந்த காலத்தில் ஆஞ்சநேயர் வழிபாடு அமைதியை வழங்கும்.

### தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு!

விளம்பி வருடத்தில் உங்களின் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். இருப்பினும் ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி வந்து விரயங்களை உண்டாக்கும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு அகலும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குடும்பச்சுமை கூடும். உடன்பிறப்புகளையும், தாய்வழி உறவினர்களையும் அனுசரித்துச் செல்லுங்கள். பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படாமலிருக்க, அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு சிலருக்கு வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். சனி-செவ்வாய் சேர்க்கை இருப்பதால் உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். பணிபுரியும் பெண்களுக்குத் திடீர் இடமாற்றங்கள் உருவாகலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பெண் பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் முடிவாக பெரும் முயற்சி எடுக்கும் சூழ்நிலை உருவாகும். சர்ப்பசாந்தி செய்வதன் மூலம் தடைகள் விலகும்.

(தொடரும்)

# மகிந்தவுக்காக திறக்கப்படும் கதவுகள்




இலங்கையில் மதில்களில் பரிச்சயமான ஒருவரின் சுவரொட்டிகள் மீண்டும் காணப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உருவப் படங்களைக் கொண்ட பல ஆயிரக் கணக்கான சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப்பலகைகள் மீண்டும் நாட்டில் தென்படுகின்றன.

ராஜபக்ஷ அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா விசாரணை மற்றும் வெள்ளை வான் கடத்தல்கள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு இலங்கையின் ஜனநாயகம் ஆபத்தில் உள்ளதாக எச்சரிக்கப்பட்டிருந்தது. அந்த நிலையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற தேர்தலில் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு மக்கள் தமது வாக்குகளை வழங்காதமை, அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

எனினும், கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பௌத்த தேசியவாதத் தலைவரான மகிந்தவின் புதிய கட்சிக்கு ஆதரவாக மக்கள் தமது வாக்குகளை வழங்கியதன் மூலம் எதிர்பாராத வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் இரண்டு ஆண்டுகளில் இடம்பெறவுள்ள நிலையில், மகிந்த ராஜபக்ஷவின் புதிய கட்சிக்கு மக்கள் அளித்த வாக்கானது, இவர் இலங்கையின் மிகவும் பிரபலமான ஒரு அரசியல் வாதி என்பதை உறுதிப்படுத்தியுள்ளதுடன், இவரது ஆதரவாளர்கள் மத்தியில் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், அதே வேளையில் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவாரோ என்கின்ற அச்சம் இவரது எதிர்ப்பாளர்கள் மத்தியில் நிலவுகிறது.

ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க்கட்சியினரால் அண்மையில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இது தோல்வியில் முடிவடைந்தது.

இந்த விவாதத்தின் போது ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் கூட இவருக்கு எதிராக பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

'இடைத்தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என நாம் விரும்புகிறோம். கூட்டு அரசாங்கத்தின் எதிர்காலமானது மிகவும் உறுதியற்றதாக அமையப் போகிறது. நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இடைத்தேர்தலை நடத்துவதைத் தவிர வேறெந்தத் தெரிவையும் கொண்டிருக்கவில்லை' என நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியின் வாரிசுமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

பெப்ரவரியில் இடம்பெற்ற தேர்தல்களுக்கான பரப்புரை விளம்பரங்கள் அச்சுறுத்தும் விதமாக அமைந்திருந்தன. 'நாட்டில் விளையாட்டில் வெற்றி பெற்றது மரண தண்டனைக்கு உட்பட்டதை நினைவுபடுத்த வேண்டும்' என ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரை பதாகை ஒன்றில் வினவப்பட்டிருந்தது.

அதாவது படுகொலைகளை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்ட ராஜபக்ஷ குடும்பத்தைச் சாடியே இந்தப் பதாகை இவ்வாறு வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதேபோன்று 'பயங்கரவாதத் தினமும் அடக்குமுறையினதும் குறியீடாக வெள்ளை வான்கள் காணப்பட்டதை நினைவுபடுத்த வேண்டும்' என்கின்ற விதத்தில் பதாகைகள் காணப்பட்டன.

இவ்வாறான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட ஒரு தலைவர் மீண்டும் எழுச்சியுறுவதானது அரசியல் அவதானிகள் மத்தியில் பெரியளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

'ராஜபக்ஷ ஒருபோதும் அரசியலை விட்டுச் செல்லமாட்டார். இவர் தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற நாளிலிருந்து அரசியல் நகர்வுகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்' என அனைத்துலக நெருக்கடிகள் குழுவின் மூத்த ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்தார்.

2015இல் இடம்பெற்ற தேர்தலில் ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டார். இவரது அரசாங்கம் மீது முன்வைக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக இவரது சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இவரிடமிருந்து விலகி கூட்டு அரசாங்கம் ஒன்றை உருவாக்கினர். ஊழலை முடிவிற்குக் கொண்டு வருவதாக பரப்புரை செய்ததன் மூலம் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைத்தனர்.

எனினும் நீண்டகாலமாக அரசியல் எதிரிகளாக இருந்த இருவர் ஒன்றாக ஆட்சியை மேற்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன.

'இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையிலான உறவானது மிகவும் மோசமாக காணப்படுகிறது' என கீனன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் போன்ற நாட்டின் சிறுபான்மை சமூகங்களின் மனங்களை வெல்வதற்காக மைத்திரிபால சிறிசேனவால் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதாவது பிராந்தியங்களுக்கான அதிகாரப் பகிர்வு, ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்குகளை ஆராய்தல், அரசியல் சாசனத்தில் மாற்றத்தை ஏற்படுத்துதல் உட்பட பல உறுதிமொழிகளை இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி முன்வைத்திருந்தார்.

நாட்டில் நிலவும் பௌத்த தேசியவாத உணர்வலைக்கு முகங்கொடுக்க முடியாததாலேயே சிறிசேன தனது நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த முடியாத நிலை காணப்படுவதை விமர்சகர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். பௌத்த தேசியவாத உணர்வலையை எதிர்ப்பதன் மூலம் மீண்டும் ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காக மைத்திரிபால சிறிசேன தனது வாக்குறுதிகளை முற்று முழுதாக நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

தற்போதைய அரசாங்கத்தால் வெங்காயம், மீன் மற்றும் தேங்காய் போன்றவற்றுக்கான விலை அதிகரிப்பதைக் கூடக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அத்துடன் உரமானியத்தை அகற்றுவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானமானது விவசாயத்துறையை வெகுவாகப் பாதித்துள்ளது.

'மகிந்த எங்களது நலனில் அக்கறை காண்பித்தார்' என இலங்கையின் தென் கரையோரக் கிராமமான மடிலாவைச் சேர்ந்த நெல் மற்றும் வாழை பயிரிடும் விவசாயி ஒருவர் தெரிவித்தார். 'அவரது ஆட்சிக்காலத்தில் விவசாய உரங்கள் தற்போதைய விலையை விட எட்டு மடங்கு குறைவாகக் காணப்படுகிறது.

தற்போது விவசாயப் பொருட்களின் விலை அதிகரித்ததால் எனது வருடாந்த இலாபமானது அரைவாசியாகக் குறைந்துள்ளது. தற்போது உரமானியங்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது. சிலவேளைகளில் இவற்றைப் பெறமுடியாத நிலையும் காணப்படுகிறது' என குறித்த விவசாயி தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் சீனர்களின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக பிறிதொரு தென்னிலங்கை விவசாயி கருணாபால கவலை தெரிவித்தார்.

சீன அரசிற்குச் சொந்தமான நிறுவனத்திடம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகால குத்தகைக்கு வழங்குவதாக சிறிசேன அரசாங்கம் கடந்த டிசம்பரில் தீர்மானித்தது.

ராஜபக்ஷ அரசாங்கத்தால் சீனாவிடமிருந்து கடனாகப் பெறப்பட்ட 8 பில்லியன் அமெரிக்க டொலரைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலேயே இத்தீர்மானத்தை சிறிசேன அரசாங்கம் எடுத்தது.

'சிறிசேன எமது சொத்துக்களை விற்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்வதை விட எமக்காக என்ன செய்துள்ளார்?' என கருணாபால வினவினார்.

2015 தொடக்கம் சில மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக கொழும்பிலுள்ள சிவில் அமைப்புக்கள் கூறுகின்றனர். அதாவது ஊடகத் தணிக்கை நீக்கப்பட்டுள்ளமை மற்றும் ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இரவு வேளைகளில் ஊடகவியலாளர்களின் வீடுகளுக்கு வெளியே நிறுத்தப்பட்ட இராணுவ வாகனங்கள் தற்போது காணப்படாமை, தற்போது ஊடகங்கள் அரசாங்கத்தைக் கூட விமர்சிப்பதற்கான ஊடக சுதந்திரம் உள்ளமை போன்ற பல்வேறு மாற்றங்கள் சிறிசேன அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுள்ளதாக சிவில் அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

அந்நூட்டன்டத்து ஆண்டுகளுக்கு முன்னர் விரட்டியடிக்கப்பட்ட மனித உரிமை அமைப்புக்கள் தற்போது மீண்டும் தமது அலுவலகங்களை இலங்கையில் திறந்துள்ளதையும் காணலாம்.

மக்கள் தற்போது இயல்பு வாழ்வை வாழ்வதாக வழக்கறிஞரும், Transparency International என்கின்ற அமைப்பின் இலங்கைக்கான இயக்குநருமான அசோக ஒபயசேகர தெரிவித்தார். 'பொதுமக்கள் தற்போது அச்சமின்றி வாழ்கின்றனர்' என அவர் குறிப்பிட்டார்.

ராஜபக்ஷ மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் வன்முறைக் குற்றச்சாட்டுக்கள் போன்றன நன்கு திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்ட பரப்புரை என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'நாங்கள் புதியதொரு ஆரம்பத்திற்காக காத்திருக்கிறோம். நாங்கள் எமது தவறுகளைத் திருத்திக் கொள்வோம். எமது அயல் நாடுகளுடன் பரந்ததொரு நட்புறவை வளர்த்துக்கொள்வோம்' என நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தனது கட்சியானது மேற்குலக நாடுகளுடன் தூய்மையான உறவை ஏற்படுத்தும் எனவும் ஆனால் இறுதிக்கட்ட யுத்தத்தில் 40,000 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான ஐ.நா பாதுகாப்புச் சபையின் விசாரணையில் பங்கெடுப்பது தொடர்பாக ஆழமாக ஆராயப்பட வேண்டிய தேவையுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

'எந்தவொரு யுத்தமும் இழப்புக்களைக் கொண்டதாகவே இருக்கும். நாங்கள் அதனை மறுக்கவில்லை ஆனால் இதன் முடிவானது எதிர்காலத்திற்கு தேவையானதாகும்' என நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

ராஜபக்ஷவின் குடும்பத்தின் எதிர்காலமானது தற்போதும் கேள்விக்குறியாகவே உள்ளது. இவர்களது கட்சியானது உள்ளூராட்சித் தேர்தலில் 45 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொண்டது.

ஆனால் இத்தேர்தல் பெறுபேறானது நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையையோ அல்லது ஜனாதிபதி பதவிக்கான வெற்றியைப் பெற்றுக் கொடுக்கப் போதுமானதாக இல்லை.

எதிர்க்கட்சிகள் தமக்குள் உள்ள பேதங்களைக் களைந்து 2015இல் ஒன்றுசேர்ந்தது போன்று தற்போதும் ஒன்று சேர்ந்தால் ராஜபக்ஷக்களை அரசியலிலிருந்து ஓரங்கட்ட முடியும்.

'உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறானது இந்த நாட்டில் எந்தவொரு அரசியல் கட்சியும் தனித்து பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை வெளிப்படுத்துகிறது.

ஆகவே இக்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணியின் கீழ் போட்டியிடும் போது பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும்' என வழக்கறிஞரான அசோக ஒபயசேகர சுட்டிக் காட்டியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வழிமூலம் | - | The Guardian |
| ஆங்கிலத்தில் | - | Michael Safi and Amantha Perera |
| மொழியாக்கம் | - | நித்தியபாரதி |

# பாரதம்

## அமெரிக்காவுக்கு எதிராக ஐ.நா.சபையில் ரஷ்யா கொண்டுவந்த தீர்மானம் தோல்வி

(நியூயோர்க்)

சிரியா மீது அமெரிக்கா கூட்டுப்படைகள் நடத்திய ஏவுகணை தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐ.நா. சபையில் ரஷ்யா கொண்டு வந்த தீர்மானம் தோல்விய டைந்தது.

ஐக்கிய நாடுகள் சபையால் தடை செய்யப்பட்ட கொடிய இரசாயன ஆயுதங்களை சிரியா அரசு பயன்படுத்தி அப்பாவி மக்களை கொன்றது தொடர்பாக விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபையின் அவசர கூட்டம் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

சர்வதேச இரசாயன ஆயுத தடுப்பு முகமையை சேர்ந்த அதிகாரிகள் சிரியாவின் டவுமா நகருக்கு நேரில் சென்று இவ்விவகாரம் தொடர்பாக ஆய்வு நடத்த வேண்டும் என்னும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு சபையில் ரஷ்யா முன்வைத்தது.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளில் 9 நாடுகள் ஒரு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குட்ரேரஸ் வலியுறுத்தி இருந்தார்.

இதற்கிடையே, சிரியாவின் மீது அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் விமானப் படைகள் நேற்று முன்தினம் காலை அடுத்தடுத்து ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின.

இந்நிலையில், இந்த தாக்குதல் தொடர்பாக விவாதிப்பதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபையை அவசரமாக கூட்டுமாறு ரஷ்யா கேட்டுக் கொண்டது.

இதையடுத்து, ஐ.நா. பாதுகாப்பு சபை நேற்று அவசரமாக கூடியது. இந்த கூட்டத்தில் ஐ.நா. பொதுச் செயலாளர் உரையாற்றினார்.

இதேவேளை சிரியா மீதான தாக்குதல்களை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும், மேற்கொண்டு சிரியாவில் தாக்குதல் நடத்த கூடாது என



தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தால்தான் அந்த தீர்மானம் நிறைவேற்றப்படும் என்னும் நிலையில் ரஷ்யாவின் தீர்மானத்துக்கு ஆதரவாக ஏழு வாக்குகள் மட்டுமே கிடைத்ததால் ரஷ்யா இயற்றிய இந்த தீர்மானம் தோல்வி அடைந்தது.

அமெரிக்காவும் ரஷ்யாவும் பரஸ்பரம் போட்டி போட்டுக் கொண்டு இருக்காமல் சிரியா விவகாரத்தில் செய்ய வேண்டிய விவகாரங்கள் தொடர்பாக முடிவெடுப்பதற்காக பிடிவாதத்தை விட்டுக்கொடுத்து பொதுகருத்தை உருவாக்க வேண்டும் என ரஷ்யா கொண்டுவந்த தீர்மானத்துக்கு சீனா மற்றும் பொலிவியா ஆதரவு தெரிவித்தன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து, சுவீடன், குவைத், போலாந்து, ஐவரி கோஸ்ட் ஆகிய எட்டு நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன.

எதியோப்பியா, கஜகஸ்தான், ஈக்குவடோர், கினியா, பெரு ஆகிய நாடுகள் வாக்களிக்கவில்லை.

இதனால் அமெரிக்காவுக்கு எதிராக ரஷ்யா கொண்டு வந்த தீர்மானம் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது. (இ-7)

# சிரியா மீது இராணுவத் தாக்கு

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்



(டமாஸ்கஸ்)

இரசாயன தாக்குதலை அழிக்கும் வரை சிரியா மீதான தாக்குதல் நீடிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக எச்சரித்துள்ளார்.

அரபுநாடான சிரியாவில் 2012-ம் ஆண்டில் இருந்து உள்நாட்டு போர் நடந்து வருகிறது. அங்கு புரட்சி படையினர் மற்றும் மதவாத அமைப்பினர் ஒன்று சேர்ந்து அரசுக்கு எதிராக போராடி வருகின்றனர்.

இந்தப் படையினருக்கு அமெரிக்கா ஆதரவாக இருந்து வருகிறது. அதே நேரத்தில் அரசுக்கு ரஷ்யா மற்றும் ஈரான் நாடுகள் ஆதரவாக உள்ளன.

புரட்சிப்படையினர் நாட்டின் பல பகுதிகளை கைப்பற்றி வைத்துள்ளனர். அவற்றை மீட்பதற்கு சிரியா படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

ரஷ்ய ராணுவம் நேரடியாக அவர்களுடன் சேர்ந்து புரட்சிப் படையுடன் போரிட்டு வருகிறது. இதன் காரணமாக புரட்சிப் படையிடம் இருந்த பல பகுதிகள் மீட்கப்பட்டன.

தலைநகரம் டமாஸ்கஸ் அருகே உள்ள கிழக்கு கூடா என்ற நகரம் புரட்சி படையினரிடம் இருந்தது. அந்த நகரை மீட்பதற்கு அண்மைக்காலமாக சிரிய இராணுவம் கடுமையாக போரிட்டது.

அப்போது விஷவாயு அடங்கிய இரசாயன குண்டுகளை இராணுவம் வீசியது. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் அதிகளவில் உயிரிழந்தனர். அதன் பிறகு அந்த நகரம் மீட்கப்பட்டது.

இரசாயனத் தாக்குதலுக்கு அப்போதே அமெரிக்கா கடுமையான எச்சரிக்கை விடுத்தது. மீண்டும் இரசாயனத் தாக்குதல் நடந்தால் நாங்கள் பார்த்து கொண்டு இருக்க மாட்டோம் என்று அமெரிக்கா கூறியது.

இந்த நிலையில் புரட்சிப் படையிடம் இருந்த மற்றொரு நகரமான டூமாவை மீட்பதற்கு கடந்த வாரம் தாக்குதல் நடந்தது. அப்போது இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், 70-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 100 பேர் இரசாயன குண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்டனர்.

இது, அமெரிக்காவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இது குறித்துக் கூறும்போது, இரசாயன குண்டு தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் எங்கள் ஏவுகணை உங்களை சந்திக்க வரும். எதிர்கொள்ள தயாராக இருங்கள் என்று கூறியிருந்தார்.

அவர் சொன்னபடியே நேற்று முன்தினம் அதிகாலை சிரியா மீது அமெரிக்கா நேரடி தாக்குதலில் ஈடுபட்டது. அமெரிக்காவுடன் சேர்ந்து இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளும்



தாக்குதல் நடத்தின.

கடலில் நிறுத்தப்பட்டு இருந்த கப்பல்களில் இருந்து ஏவுகணைகள் மூலமும், விமானங்கள் மூலமும் குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டன.

100-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் பறந்து வந்து தாக்கின. தலைநகரம் டமாஸ்கஸ் அருகே உள்ள சிரியாவின் இரசாயன ஆராய்ச்சி மையம், பசரா என்ற இடத்தில் உள்ள இரசாயன ஆயுத தயாரிப்பு கூடம், காம்ஸ் என்ற இடத்தில் உள்ள இரசாயன ஆயுத கிடங்கு ஆகியவற்றை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், அந்த இடங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டதாக அமெரிக்கா கூறி இருக்கிறது. ஆனால் சிரியா இந்த தாக்குதலில் சிறிய சேதங்கள் தான் ஏற்பட்டன. எங்கள் இராணுவ மையங்களுக்கு பாதிப்பு எதுவும் இல்லை என்று கூறியுள்ளது.

இது தொடர்பாக ரஷ்யா கூறும்போது, மொத்தம் 103 ஏவுகணைகள் கொண்டு சிரியா மீது தாக்கப்பட்டது. அவற்றில் 71 ஏவுகணைகளை சிரியா இராணுவம் நடுவானிலேயே அழித்து விட்டது. சிரியாவில் பெரிய பாதிப்புகள் இல்லை என்று கூறியுள்ளது.


ஆனால், அந்த 3 இடங்களையும் தாக்குதலுக்கு முன்பும், பின்பும் செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட படத்தை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. அதில், அந்த இடங்கள் தரை மட்டமாகி கிடக்கும் காட்சியுள்ளது.

இந்த தாக்குதலில் உயிரிழப்பு எதுவும் இல்லை என்று அமெரிக்கா, சிரியா இரு நாடுகளுமே கூறியிருக்கின்றன. 3 பேருக்கு மட்டும் காயம் ஏற்பட்டு இருப்பதாக சிரியா தெரிவித்துள்ளது. அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகள் நடத்திய தாக்குதலுக்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புடின் இதுபற்றி கூறும்போது, அமெரிக்கா தனது அதிகார பலத்தை காட்டும் வகையில் இந்த தாக்குதலை நடத்தியிருக்கிறது. சிரியாவில் மாபெரும் மனித பேரழிவை ஏற்படுத்த முயற்சித்து இருக்கிறார்கள். இது, சர்வதேச நல்லுறவுக்கு நல்லது அல்ல என்று கூறியுள்ளார்.

சிரியா ஜனாதிபதி பஷர் அல்

## புகையிரதம் தடம்புரள்வு; 12 பேர் படுகாயம்



(போபால்)

மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் கட்னி - சோபான் பயணிகள் புகையிரதத்தின் ஐந்து பெட்டிகள் தடம்புரண்டதில் 12 பயணிகள் காயமடைந்தனர். மத்தியப் பிரதேசம் மாநிலத்தின் கட்னியில் இருந்து சோட்னா நோக்கி பயணிகள் புகையிரதம் தினமும் இரவு 9.25 மணிக்கு புறப்பட்டுச் செல்லும்.

வழக்கம்போல் நேற்று முன்தினம் இரவு கட்னியில் இருந்து பயணிகள் புகையிரதம் புறப்பட்டு சென்றது. சல்னா மற்றும் பிபரியகாலா புகையிரத நிலையங்களுக்கு இடையே இந்த புகையிரதத்தின் ஐந்து பெட்டிகள் திடீரென தடம் புரண்டன. இதில் 12-க்கு மேற்பட்ட பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து ரயில்வே மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்த்து சிகிச்சையளித்து வருகின்றனர்.

பயணிகள் புகையிரதம் தடம் புரண்டது குறித்து ரயில்வே உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

## மாநிலங்களவை

## அருண் ஜெட்லி

(டில்லி)

பா.ஜ.க.வை சேர்ந்த மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி நேற்று மாநிலங்களவை எம்.பியாக பதவியேற்றுக் கொண்டார்.

காலியாக இருந்த மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு எம்.பிக்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பியாக நிதி அமைச்சர் அருண் ஜெட்லி தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில், அருண் ஜெட்லி மாநிலங்களவை எம்.பியாக நேற்று முற்பகல் 11 மணியளவில் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசு துணை தலைவரும், மாநிலங்களவை தலைவருமான வெங்கய்யா நாயுடு பாராளுமன்ற வளாகத்தில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். (இ-7)

# வெளிநாடு

## ...குதல் நீடிக்கும்
## ...ப் எச்சரிக்கை

ஆசாத் கூறும் போது. அமெரிக்கா நடத்திய இந்த தாக்குதல் நாங்கள் தீவிரவாதத்துக்கு எதிராக இன்னும் உறுதிப்பாட்டோடு தாக்குதல் நடத்து கூறினார்.

எங்கள் ஜனாதிபதி ஒரு எல்லை வகுத்துள்ளார். அந்த எல்லையை தாண்



வதற்கு தூண்டுதலை ஏற்படுத்தி யுள்ளது என்று கூறியுள்ளார்.

சீனா மற்றும் ஈரான் நாடுகளும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே இந்தத் தாக்குதல் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபை யின் அவசர கூட்டம் நேற்று நடைபெற்றது.

அப்போது அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்கு ரஷ்யா கண்டன தீர் மானம் கொண்டு வந்தது.

அதே நேரத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து, சுவீடன், குவைத், போலந்து, ஐவரி கோஸ்ட் உட்பட 8 நாடுகள் எதிராக வாக்களித்தன.

இந்த தீர்மானத்தின் போது, பேசிய ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் நிக்கி காலே ,

சிரியா நடத்திய இரசாயன தாக்குத லையும், அத்துமீறலையும் தடுக்கும் வகையில் தான் அவர்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு தெளிவான செய்தி அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் மீண்டும் இரசாயன தாக்குதல் நடத் தனாம்.

இது சம்பந்தமாக எங்கள் ஜனா திபதி டொனால்ட் ட்ரம்ப் என்னிடம் பேசினார். அவர் இனிமேலும் சிரியா இரசாயன தாக்குதல் நடத்தினால் மீண்டும் பதிலடி தாக்குதல் நடத் தப்படும். இதற்காக அமெரிக்கா ஆயு தங்களை தயார் நிலையில் வைத் துள்ளது என்று ட்ரம்ப் என்னிடம் டும் போது உரிய நடவடி க்கைகளை மேற்கொள்வார்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஐ.நாவுக்கான ரஷ்யத் தூதர் நெபன்சியா கூறும் போது. அமெரிக்கா. இங்கி லாந்து. பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்களது அத்து மீறலை, அதிகாரத்தை காட் டியுள்ளன. இதன் மூலம் சர்வதேச சட்டத்தை மீறி யுள்ளன என்று கூறினார்.

அதற்கு அமெரிக்க தூதர் நிக்கி காலே ரஷ்யாதான் தொடர்ந்து சர்வதேச சட்டங் களை மீறி வருகிறது. சர்வதேச சட்டங் ளை மீறி இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு ரஷ்யா உதவியாக இருந்து வருகி றது என்று கூறினார்.

சிரியா தூதர் ஜாபரி கூறும் போது, ரஷ்யாவும் அதன் கூட்டு நாடுகளும் நாங்கள் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்துவதாக பொய் தகவல்களை வெளியி டுகின்றன.

அவர்கள் மற்ற நாடு களை தங்கள் காலனி நாடு கள் போல் பாவித்து அடக்கு முறையை கையாள்கின் றனர் என்று குற்றம் சாட்டி னார். (இ-7)

## பாதுகாப்புப் படையினரின் தேடுதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 6 பேர் கைது



(பக்தாத்)

ஈராக்கில் பாதுகாப்பு படை யினரின் தேடுதல் வேட்டை யில் ஐ.எஸ். பயங்கரவாதி கள் 6 பேர் கைது செய்யப் பட்டனர்.

ஈராக்கில் ஐ.எஸ். பயங் கரவாதிகள் தொடர்ந்து ஆதிக் கம் செலுத்தி வருகிறார்கள். அவர்கள், ஈராக் படையின ருக்கு எதிராக பல்வேறு இடங் களிலும் தொடர்ந்து தாக்கு தல்கள் நடத்தி, பெரும் உயி ரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

கடந்த டிசெம்பர் மாதம், ஈராக்கில் ஐ.எஸ். பயங்கர வாதிகள் பிடியில் இருந்து வந்த ஈராக் நகரங்கள் அத் தனையும் முழுமையாக விடுவிக்கப்பட்டு விட்டதாக வும், அவர்களுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்து விட்ட தாகவும் அந்த நாட்டின் பிரதமர் ஹைதர் அல்அபாதி தெரிவித்தார்.

ஆனால் ஐ.எஸ். பயங் கரவாதிகளை இன்னும் முற்றிலுமாக ஒடுக்க முடிய வில்லை.

இந்த நிலையில், நினிவே மாகாணத்தில் கால் பதித்து உள்ள ஐ.எஸ். பயங்கரவா திகள் தேடுதல் வேட்டையை அந்த நாட்டின் பாதுகாப்பு படையினர் தீவிரப்படுத்தி உள்ளனர்.

நேற்று முன்தினம் அங்கு தால் அபார் நகரை அடுத்து உள்ள அபு மரியா கிராமத் தில் 2 ஐ.எஸ். பயங்கரவாதி கள் கைது செய்யப்பட்டனர்.

மொசூல் பகுதியில் 4 ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். மொத்தம் கைது செய்யப் பட்டுள்ள 6 ஐ.எஸ். -பயங் கரவாதிகளில் ஒருவர் பெண் ஆவார்.

சமீபத்தில் மேற்கு மொசூல் நகரில் பாதுகாப்பு படை யினர் நடத்திய தீவிர தேடு தல் வேட்டையில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 20 பேர் கைது செய்யப்பட்டது நினைவு கூரத்தக்கது. (7)

## இராணுவ முகாமை கைப்பற்றும் முயற்சி முறியடிப்பு படைவீரர்கள் உட்பட 22 பேர் பலி

(கெய்ரோ)

எகிப்து நாட்டின் சினாய் பிரதேசத்தில் உள்ள இரா ணுவ முகாமை கைப்பற் றும் பயங்கரவாதிகளின் முயற்சியை முறியடிக்கும் துப்பாக்கிச் சண்டையில் 8 வீரர்கள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்.

எகிப்தில் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப் பட்ட முதல் ஜனாதிபதி முக மது மோர்சி (64). முப்ப தாண்டுகளுக்கும் மேலாக பதவியில் இருந்த ஹோஸ்னி முபாரக்கை கடந்த 2012-ம் ஆண்டில் பதவியிலிருந்து இறக்கிவிட்டு ஜனாதிபதி பதவியைப் பிடித்த மோர்சி யால் ஓராண்டுக்கு மேல் அந் தப் பதவியில் நீடிக்க முடிய வில்லை.



எகிப்தின் இராணுவத் தலைவராக இருந்த அப்டெல் சிசி என்பவர் மோர்சியை பதவியிலிருந்து இறக்கி கைது செய்து சிறையிலும் அடைத்தார். அவர்மீது பல வழக்குகள் தொடரப்பட்டுள் ளன. கடந்த 2013-ம் ஆண் டில் இருந்து மோர்சியின் ஆதரவாளர்கள் அரசுக்கு எதி ராக ஆயுதப் போராட்டங் களில் ஈடுபட்டு வருகின்ற னர்.

குறிப்பாக, நைல் நதியை ஒட்டியுள்ள சமவெளி பகுதி யான வடக்கு மற்றும் மத்திய சினாய் பிரதேசத்தில் ஆதிக் கம் செலுத்திவரும் கலகப் படையினரை பயங்கரவாதி களாக அறிவித்துள்ள எகிப்து அரசு அவர்களை வேட்டை யாடும் நடவடிக்கைகளை தீவிரமாக முடுக்கி விட்டுள் ளது.

இந்நிலையில், நேற்று அதிகாலை சினாய் பிரதே சத்தின் மத்திய பகுதியில் உள்ள இராணுவ முகாமை கைப்பற்றும் நோக்கத்தில் பயங்கர ஆயுதங்களுடன் வந்த தற்கொலைப் படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்பு படை யினர் அவர்களை தடுக்க எதிர் தாக்குதலில் ஈடுபட்ட னர்.

இருதரப்பினருக்கும் இடையில் நடந்த மோதலில் தீவிரவாதிகளில் 14 பேரும் 8 இராணுவ வீரர்களும் உயி ரிழந்தனர். காயமடைந்த 15 ராணுவ வீரர்கள் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (7)

## ...வை எம்.பியாக ...லி பதவியேற்பு



## தேர்தலில் பிரதமர் வெற்றிக்கு எதிராக ஹங்கேரியில் ஒரு இலட்சம் பேர் போராட்டம்



(புடாபெஸ்ட்)

ஹங்கேரி நாட்டில் பிரத மர் தேர்தலில் முறைகேடு நடந் திருப்பதாக கூறி ஒரு லட்சம் பேர் பேரணியில் ஈடுபட்டு பின்னர் பாராளுமன்றம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹங்கேரியில் கடந்த வாரம் பாராளுமன்ற தேர் தல் நடந்தது.

அதில் பிரதமர் விக்டர் ஆர்பின் கட்சி அமோக வெற்றி பெற்றது.

எனவே, விக்டர் ஆர்பின் மீண்டும் பிரதமராக பத வியேற்றார்.

அவர் பதவியேற்ற 6 நாட் களுக்கு பிறகு தேர்தலில் அவர் பெற்ற வெற்றியை எதிர்த்து பொதுமக்கள் நேற்று முன் தினம் பேரணி நடத்தினர். தலைநகர் புடாபெஸ்டில் பேஸ்புக் குழுவினர் நடத்திய இப் பேரணியில் ஒரு லட்சம் பேர் திரண்டனர். பின்னர் பாராளுமன்றம் முன்பு போராட் டத்தில் ஈடுபட்டனர். அவர் களில் பெரும்பாலானோர் ஹங்கேரியின் தேசியக் கொடி யையும், ஐரோப்பிய யூனி யனின் கொடியையும் ஏந்தி யபடி பேரணியில் பங்கேற்ற னர்.

தேர்தலில் முறைகேடு செய்து பிரதமர் விக்டர் ஆர் பின் வெற்றிபெற்று விட்டார். எனவே அனைத்து வாக்குக ளையும் மறுபடியும் எண்ண வேண்டும்.

புதிய தேர்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண் டும் என்பன போன்ற கோரிக் கைகளை வலியுறுத்தி இப் போராட்டம் நடைபெற்றது. இதுபோன்ற போராட்டம் அடுத்த வாரமும் நடைபெறும் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டம் குறித்து பிர தமர் ஆர்பினிடம் கருத்து கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றுவிட் டோம்.

வேறு எதுவும் சொல் வதற்கு இல்லை என தெரி வித்து விட்டார். போராட்டத் தில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானோர் இளை ஞர்கள் ஆவர். (இ)

# தேசிய அரசை முன்னெடுத்துச் செல்ல நாடாளுமன்றின் அனுமதி தேவை

## சரத் என் சில்வா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல நாடாளுமன்றின் அனுமதி தேவை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பு வார இறுதி ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 அமைச்சர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறியிருப்பதால் தேசிய அரசாங்கம் இரத்தாகியுள்ளது.

எனவே, தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நாடாளுமன்றின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில், தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல நாடாளுமன்றிடம் அனுமதி பெற்றுக் கொள்ளாமை பாரிய சட்டவிரோதமான செயலாகும்.



உரிய அனுமதி பெற்றுக் கொள்ளாது தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்துச் சென்றால், அரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக நீதிமன்றின் உதவியை நாட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# போர்த்தளபாடக் கொள்வனவு தொடர்பாக ரஷ்யாவுடன் இலங்கை உயர்மட்டக்குழு பேச்சு

(கொழும்பு)

ரஷ்யாவிடமிருந்து இராணுவ தளபாடங்களைக்கொள்வனவு செய்வது தொடர்பாக பேச்சுக்களை நடத்தி விட்டுத் திரும்பியுள்ளது இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக் குழு.

பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் சரத் குமார, பாதுகாப்பு அமைச்சின் வான் பாதுகாப்பு ஆலோசகர் விங் கொமாண்டர் டில்சான் வாசகே ஆகியோரை உள்ளடக்கிய குழு ரஷ்யா சென்றிருந்தது.



ரஷ்யாவிடம் இருந்து போர் விமானங்கள், போர்க்கப்பல் மற்றும் ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வது பற்றிய பேச்சுக்களை நடத்தவே இவர்கள் மொஸ்கோ சென்றிருந்தனர்.

போர்த்தளபாடக் கொள்வனவுகள் தொடர்பாக ரஷ்யாவின் உயர்மட்டத்துடன் பேச்சுக்களை நடத்தி விட்டு இந்தக் குழு நாடு திரும்பியுள்ளது.

எனினும், எந்தெந்த ஆயுத தளபாடக் கொள்வனவுகள் பற்றி இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன என்ற தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை. (இ-7)

# உணவு மற்றும் குளிர்பானங்களின் தரத்தைப் பரிசோதிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சந்தைக்கு விநியோகிக்கப்படும் உணவு மற்றும் குளிர் பானங்களின் தரத்தை பரிசோதிப்பதற்காக இம்மாதம் ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் இம்மாதம் இறுதிவரை முன்னெடுக்கப்படும்.

இந்த பரிசோதனை நடவடிக்கையை உணவு, சுகாதார பிரிவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரி பிரிவு மேற்கொண்டு வருகிறது.

நாட்டில் 24 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட உணவு மாதிரிகள் இதன் கீழ் பரிசோதனை செய்யப்படுகின்றன என்று சுகாதார அமைச்சின் உணவு பரிசோதனை மற்றும் தொழில் சுகாதார பிரிவின் பணிப்பாளர் டாக்டர் லக்ஷ்மன் கமலத் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாக்.எதிர்க்கட்சித் தலைவருடன் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சந்திப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் குர்ஷித் ஷா மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஹக்கீம் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அவரை சந்தித்தார்.



எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்திற்கு சென்ற அமைச்சரை மகிழ்ச்சியுடன் வரவேற்று நினைவுச்சின்னம் ஒன்றையும் வழங்கினார்.

இருதரப்பு உறவுகள் குறித்து நடைபெற்ற கலந்துரையாடலில் பாகிஸ்தான் நாட்டு மக்களின் வாழ்வாதாரம், சனத்தொகை மற்றும் விவசாயம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### முன் முடிவுக்காரர்கள்

இந்தப் படம் நன்றாக இருக்காது; இந்த சோப் அழுக்கைப் போக்காது; இந்தப் பேச்சாளர் நன்றாகப் பேசமாட்டார்; இந்த ஆள் நன்றாகப் பணிபுரிவார்; இந்த நாவல் சுவாரசியமாக இராது; இப்படி எல்லா விடயங்களிலும் முன்கூட்டியே முடிவெடுத்து விடுகிறவர்கள் நம்மில் அநேகம் பேர்.

அதே நேரத்தில் இவர்கள் எடுத்த முடிவுக்கு மாறாக, அந்தத் திரைப்படம் நன்றாக ஓடி,சோப் பிரமாத சோப்பாக அமைந்து, அவர் அற்புதமாகப் பேசி, மற்றவர்கள் படுமோசமாக ஏமாற்றி, அந்த நாவல் பிரமாதமாக அமைந்து விட்டால் நம்முடைய கணிப்பீடுகள் எல்லாம் பொய்யாகி விட்டனவே என்று இவர்கள் எண்ணிப் பார்க்கமாட்டார்கள்; அடுத்த முறை ஒன்றைக் கணிக்கும் போது இவர்கள் தங்களை மாற்றிக் கொள்வதும் இல்லை.

மறுபடி பத்து விடயங்களில் முன் முடிவு எடுத்து மறுபடியும் கோட்டை விடுவார்கள். எப்படி இந்த முடிவுக்கு வந்தீர்கள் என்று கேட்டால், “என்னவோ எனக்கு அப்படித்தான் தோணுது!'' என்பார்களே தவிர, வேறு எதுவும் சொல்லத் தெரியாது!

சிறுசிறு விடயங்களில் நம் முன் முடிவுகள் தவறாக இருந்து விட்டால் பரவாயில்லை. உதாரணமாக அந்த ரயில் இந்த ஸ்டேஷனில் நிற்காது என்று நினைத்தேன்; இந்தச் சாலை அந்த ஊருக்குப் போகும் என்று நினைத்தேன் என்று சொல்லப்படும் விடயங்களில் நம் எண்ணம் பொய்த்தால் அதனால் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை.

ஆனால் வாழ்க்கையில் முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது எந்தப் பின்னணியையும் தெரிந்து கொள்ளாமல் முன் முடிவுகளை எடுப்பதும் அந்த முடிவுகளின் வழியே தொடர்ந்து சிந்திப்பதும் அவற்றின் வழியே கண்ணை மூடிக்கொண்டு செயற்படுவதும் மிக ஆபத்து. இந்த மனப்பாங்கு, எவராக இருந்தாலும் அவர்களைப் படுகுழியில் தள்ளி விடும்.

இனி ஒரு விதி செய்வோம்.

நாம் ஒன்றைத் திடமாக நம்பினால் அதற்குச் சரியான காரணகாரியங்கள் தேவை. கண்டும், கேட்டும் நடைமுறைப்படுத்தி உணர்ந்தும் ஒரு விடயத்தில் முடிவுக்கு வர வேண்டும். எடுத்த எடுப்பிலேயே முன்முடிவு செய்து விடக் கூடாது.

அடுத்து, முன் முடிவு எடுத்த விடயங்களையெல்லாம் பட்டியலிட வேண்டும், அந்த முன்முடிவுகளில் எத்தனை விடயங்கள் நம் முடிவுப்படி இருந்தன என்பதைக் கணக்கிட வேண்டும். இது முன்முடிவு எடுப்பதில் நாம் எவ்வளவு வல்லவர் என்பதைக் காட்டி விடும்.

அது மட்டுமல்ல, இப்படிச் செய்ததில் இன்னொரு நன்மையும் இருக்கிறது. அது, இனி நாம் எடுக்கும் முன் முடிவுகள் மிகச் சரியாக இருக்க வேண்டுமே என்கிற அக்கறை.

இந்த அக்கறை நமக்கு வந்துவிட்டால் போதும், நாம் விழித்துக் கொண்டுவிட்டோம் என்று பொருள்.

**லேனா தமிழ்வாணன்**

# துரோகிகள் யார்?

## விரைவில் அம்பலப்படுத்துவாராம் சுசில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் துரோகிகள் யார் என்பதை விரைவில் அம்பலப்படுத்த உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு வார இறுதி பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடித்ததன் பின்னணியில் செயற்பட்ட துரோகிகள் யார் என்பது விரைவில் வெளிப்படுத்தப்படும்.

நாட்டுக்குத் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் நான் உள்ளிட்ட 16 சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் முன்னெடுத்த முயற்சியை சிலர் காட்டிக் கொடுத்து விட்டனர்.

இவ்வாறு காட்டிக் கொடுத்தவர்கள் இனத் துரோகிகளாகவே அடையாளப்படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்கள் இவ்வாறான துரோகிகளுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்பித்துக் கொடுப்பார்கள்.

இந்த துரோகிகள் தொடர்பில் நாடு முழுவதிலும் உள்ள கட்சியின் ஆதரவாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுதந்திரக் கட்சியும், கூட்டு எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவதற்கு எவ்விதத்தடையும் கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



## 125, 000 குடும்பங்களுக்கு 44 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

ஒரு இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில்,இவர்களுள் 80 ஆயிரம் குடும்பங்கள் நிதித்துறையின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன. எஞ்சிய 45 ஆயிரம் குடும்பங்களை ஊக்குவிப்பதற்காக பொருளாதார ரீதியிலும் கிராம அபிவிருத்தியின் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்காக 44 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## பொலித்தீன் பாவனைக்கு எதிராக சட்டத்தை கடுமையாக்க நடவடிக்கை

(கொழும்பு)

தடைசெய்யப்பட்டுள்ள பொலித்தீன் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.


அதிகாரசபையின் தலைவர் சந்திரரத்ன பல்லேகம இதனைத் தெரிவித்தார்.

பொலித்தீன் பாவனைக்கு எதிரான சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொலித்தீன் பாவனையற்ற ஒரு நாடாக இலங்கையை மாற்றுவதே இதன் நோக்கமாகும். பொலித்தீனுக்குப் பதிலான மாற்று ஏற்பாடுகள் குறித்து தற்போது அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக சந்திரரத்ன பல்லேகம மேலும் தெரிவித்தார். (இ-7)

## வெறிச்சோடிப் போன குட்டி லண்டன்





(ஹற்றன்)

இலங்கையில் குட்டி லண்டன் என வர்ணிக்கப்படும் நுவரெலியாவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளமையினால் வெறிச்சோடி கிடப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நுவரெலியாவிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இந்த முறை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன் கண்டியில் இடம்பெற்ற வன்முறையின் காரணமாக இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை நுவரெலியாவிற்கு வருகைதரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 40 வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது.

மேலும், சுற்றுலா பயணிகள் இந்த பகுதிக்கு செல்வதை தவிர்த்திருப்பதால் அங்குள்ள ஹோட்டல்கள், விடுதிகள், பஸார்கள் வெறிச்சோடியிருப்பதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## கடற்றொழில் ஊழியர்களின் சம்பள கொடுப்பனவுகளை வழங்க அரசு நடவடிக்கை

### மகிந்த அமரவீர தகவல்




(கொழும்பு)


கடற்றொழில் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் கடற்றொழில் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பள மிகுதியும் அனைத்துக் கொடுப்பனவுகளையும் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவற்றைச் செலுத்துவதற்காக 168 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் முதல் கடற்றொழில் கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக உயர்ந்திருப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் மூவருக்கு அமைச்சுப் பதவி







(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட மூன்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

ரங்கே பண்டார, வசந்த சேனநாயக்க மற்றும் வசந்த அலுவிஹாரே ஆகியோர் அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கோரி வருகின்றனர்.

இவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இந்த மூன்று பேருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படாவிட்டால் அவர்கள் கட்சிக்குள் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்துவார்கள் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

## ஓடிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் தீ!





(ஏறாவூர்)

களுவாஞ்சிகுடி - தேற்றாத்தீவு பிரதான வீதி வழியாக சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. குறித்த சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த சாரதி உயிர் தப்பியுள்ளார்.

தீகட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட போதும் குறித்த மோட்டார் சைக்கிள் பகுதியளவில் கருகியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட எரிபொருள் கசிவின் காரணமாகவே இத் தீ விபத்து இடம்பெற்றது என குறித்த மோட்டார் சைக்கிளின் சாரதி தெரிவித்தார். (இ-7)

# சிரியாவின் கவுட்டா நகர் அரச படைகள் வசம்



## இராணுவச் செய்தித் தொடர்பாளர் நேற்று அறிவிப்பு

(டமாஸ்கஸ்)

கிழக்கு கவுட்டா பகுதியில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் சிக்கியிருந்த கவுட்டா நகரத்தை அரசுப் படைகள் முழுமையாக கைப்பற்றி விட்டதாக சிரியா அரசு நேற்று அறிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரினால் இது வரை 1.2 கோடி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். சுமார் 61 இலட்சம் மக்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர். 56 இலட்சம் பேர் வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர்.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடங்கியதில் இருந்து இதுவரை அங்கு 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். பல இலட்சம் பேர் காணாமல் போயுள்ளனர்.

சிரியாவில் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக உள்நாட்டு கிளர்ச்சியாளர்கள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் மறைமுகமாக ஆதரவு தெரிவித்து வருகின்றன.

அதேவேளையில், அமெரிக்காவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்துவரும் ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தலைமையிலான அரசையும், கிளர்ச்சியாளர்கள் மீதான அரசுப் படைகளின் தாக்குதலையும் ஆதரித்து வருகின்றன.



கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கத்தில் இருந்துவரும் கிழக்கு கவுட்டா பகுதியை மீட்பதற்காக சிரியா படைகள் உச்சகட்ட தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அங்குள்ள சுமார் 4 இலட்சம் பொதுமக்களில் பெரும்பான்மையானவர்கள் வெளியேறி விட்ட நிலையில் இருதரப்பினருக்கும் இடையிலான மோதல்களில் சுமார் 1700 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்ததாக மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்நிலையில், கிழக்கு கவுட்டா பகுதிக்கு உட்பட்ட டவுமா நகரில் 07-04-2018 விமானப்படையை சேர்ந்த ஹெலிகொப்டர்கள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 70-க்கும் அதிகமானவர்கள் மூச்சுத்திணறி உயிரிழந்ததாக அங்குள்ள போர் நிலவரங்களை கண்காணித்து வரும் முகமை தெரிவித்தது.

கிழக்கு கவுட்டா பகுதியில் கிளர்ச்சியாளர்களின் கடைசி கோட்டையாக இருந்த கவுட்டா நகரத்தை அரசுப் படைகள் முழுமையாக கைப்பற்றி விட்டதாகவும், அங்கு பதுங்கியிருந்த அரசு எதிர்ப்பாளர்கள் அனைவரும், ஒழிக்கப்பட்டதாகவும், விரட்டியடிக்கப்பட்டதாகவும் சிரியா அரசு நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, சிரியாவின் அரசு தொலைக் காட்சியில் தோன்றி மக்களிடையே பேசிய சிரியா ராணுவ செய்தித் தொடர்பாளர், டமாஸ்கஸ் நகரின் புறநகரான கிழக்கு கவுட்டாவுக்கு உட்பட்ட பகுதிகள் அனைத்தும் பயங்கரவாதத்தில் இருந்து தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். (இ)

# 5 வான் கதவுகள் திறப்பு



(கொழும்பு)

உடவளவை நீர்த்தேக்கத்தின் 5 வான் கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது என மகாவலி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

உடவளவை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ள காரணத்தினால் 5 வான் கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் குறித்த பகுதியில் தாழ்நில பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் வளவை ஆற்றை உபயோகிப்போரும் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 22

பரமசாமி பஞ்சாட்சரம்

யாத்திரையை நடத்துபவர்களாகிய அவுஸ்திரேலிய ஏஜெண்டும் எக்கோரெக் நேபாள ஏஜெண்டும், சீன வழிகாட்டுபவர்களும் எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். இவர்களின் அனுசரணையுடன் தான் சீனாவில் யாத்திரை செல்ல முடியும் என்பதைப் பின்பு அறிந்தோம்.

எங்கள் குழுவும், சீன உதவியாளர்களும் ஒரு சீனப் பேருந்திலும் திருமதி பிரேமும், திருமதி சாலினி பட்டேலும் பாதுகாவலர்களும் ஒரு ஜீப்பிலும், நேபாள உதவியாளர்கள் சமையல் சாமான்களுடன் பெரிய இரு வாகனங்களிலும் நையிலம் நோக்கிச் சென்றோம்,

நேபாளத்தில் நாங்கள் இருந்த விடுதிகளில் எங்களுக்கு உணவு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சீனாவில் எங்களுக்கு நேபாள உதவியாளர்கள் (Sherpa) சமைக்கும் உணவு தான் எல்லா வேளைகளிலும் பரிமாறப்பட்டது. இவர்கள் காட்டுப் பாதை நடுவிலும் உணவு தயார் செய்து பரிமாறினார்கள். அநேகமாகக் காலையில் உப்புமா, பூரி, பருப்புக்கறி, கிழங்குக்கறி, சாம்பாரும் மதியத்திற்கும் இரவிற்கும் சோறு, பூரி, சப்பாத்தியுடன் மூன்று மரக்கறிகளும் பரிமாறினார்கள்.

ஜாங்மூவைக் கடந்து வரும் போது மீண்டும் அழகிய மலைகள், அருவிகள், பள்ளத்தாக்குகள், மலைச்சரிவில் மரங்கள் பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகள் கண்களுக்கு விருந்தளித்தன. சிறிது தூரம் சென்ற பின் சீன இராணுவப் பரிசோதனை இருந்தது. அதையும் முடித்துக் கொண்டு 153கி.மீதூரம் வரை பயணம் செய்து நையிலம் நகரத்தை அடைந்து ஒரு விடுதியிலே தங்கினோம்.

கலகலப்பாக இருந்த குழுவினர்களின் உற்சாகம், குறைந்து சிலருக்குப் பிரச்சினைகள் தோன்றின. கைவிறைப்பு, தலைவலி, வாந்தி போன்று சிறு உபாதைகள் காணப்பட்டன. சிறிது நேரம் ஆறுதல் எடுத்ததும் அவர்களின் உடல் நிலை சீராகி விட்டது என்று சொன்னார்கள்.

ஐந்தாம் நாள் 06.08.14 நையிலம் (உயரம் 3750மீ)

ஐந்தாம் நாள் காலை நையிலத்திலுள்ள உருமலையில் ஏற வேண்டும் என்று உதவியாளர் சொன்னார். அவர் கூறியபடி உடைகளை அணிந்து கொண்டு மலையடிவாரத்தை அடைந்தோம். எமது குழுவிலுள்ள அனைவரும் சீன உதவியாளர்களுடன் மலையில் ஏறி இறங்கினோம்.



சீன உதவியாளர்கள் எங்களை 3750மீற்றர் உயரத்திலிருந்து 4750 மீற்றர் வரை ஏறி இறங்க வைத்தது எமது உடல் நிலையை அவதானிப்பதற்காக எனப் பின்பு அறிந்தோம்.யாத்திரை முடியும் வரை தொடர்ந்து இவர்கள் எங்களைக் கண்காணித்தபடியே இருந்தார்கள். அன்று இரவும் நையிலம் விடுதியிலேயே தங்கினோம். மலைகளின் உயரங்களிற்கு ஏற்ப மாறும் தட்ப வெப்ப நிலைக்கு நம் உடல் பழக வேண்டும் என்பதால் பயணத்திற்கிடையில் தங்கவும் வைக்கின்றார்கள்.

சீன உதவியாளரில் ஒருவர் மட்டுமே ஆங்கிலம் பேசக்கூடியவராக காணப்பட்டார். மற்றவர்களுக்கெல்லாம் கைப்பாசையாலேதான் தொடர்பு கொண்டார்கள். இவர்கள் எந்த நேரமும் எங்களில் யார் யாருக்கு உடல் நலக் குறைவு ஏதாவது ஏற்படுகிறதா என்பதை உன்னிப்பாகக் கவனித்த வண்ணமே இருந்தார்கள். ஒருவருக்கு வருத்தம் ஏற்படுகிறதெனக் கண்டால் அவரை யாத்திரையினின்றும் நிறுத்தி விடுவார்கள்.

யாத்திரை முடியும் வரை தொடர்ந்து இவர்கள் எங்களைக் கண்காணித்த படி இருந்தார்கள்.

(தொடரும்)

# ஏழைப் பிள்ளைகளை ஏமாற்றி விட்டு புத்தாண்டு கொண்டாடிய ஜனாதிபதி

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டுக்கு விடுதலை செய்வதாக கூறி அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் பிள்ளைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏமாற்றி விட்டார் என தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், ஏழைப் பிள்ளைகளை ஏமாற்றி விட்டு தான் மட்டும் வீட்டில் தனது பிள்ளைகளுடன் புத்தாண்டை கொண்டாடியுள்ளார் எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுன்னாகத்தை சேர்ந்த 36 வயதுடைய இராபல்லவன் தபோரூபன் என்ற அரசியல் கைதி தன் மீதான வழக்கை துரிதப்படுத்தி விடுதலை செய்யுமாறு கோரி தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இவர் தனி அறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு இயற்கைக்கடன் உணவு உண்ணல் என அனைத்தையும் ஒரே அறையிலேயே மேற்கொள்ள வேண்டிய அவல நிலையில் உள்ளார்.

இது தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.



தனி அறையில் அடைக்க கூடாது, மருத்துவ வசதிகள் வழங்கப்பட வேண்டும். என்ற கோரிக்கையை பல இடங்களில் நாம் முன்வைத்துள்ளோம். இலங்கை அரசுக்கு தொடர்ந்தும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கியுள்ளது. அவர்கள் இந்த கைதிகளை பற்றி ஒன்றும் பேசாமல் மௌனமாக உள்ளார்கள்.

பிரதமர் ரணிலையும் நிபந்தனையின்றி பாதுகாத்துள்ளனர். இந்திய மேற்கு நாடுகள் ரணிலின் பதவியை தக்க வைக்க விரும்பும் நிலையில் அந்த நாடுகளிடம் உத்தரவாதத்தைப் பெற்றிருக்க முடியும். ரணிலிடம் உத்தரவாதம் பெறுவது தேவையற்றது.

பூசாவில் இருந்து விடுதலை பெற்ற அரசியல் கைதியொருவர், சிறைச்சாலைகளில் காணாமல் போன அரசியல் கைதிகள் உள்ளார்கள் என்ற தகவலை கூறியுள்ளார். இவர்களை கண்டுபிடித்து உறவுகளோடு இணைக்கும் செயற்பாட்டையாவது அரசோடு இணைந்துள்ள தமிழத்தேசிய கூட்டமைப்பு முன்னெடுக்க வேண்டும்.

இதேபோன்று ஜனாதிபதி மைத்திரி ஆனந்த சுதாகரனின் குழந்தைகளை ஏமாற்றி விட்டார். இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாடுகளின் அழுத்தத்தின் மூலம் தான் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## கப் வாகனம் மோதியதில் ஒருவர் பலி

அம்பலாந்தொட்ட, ஹங்கம பகுதியில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கப் வாகனம் ஒன்று பாதையில் பயணித்த நபர் ஒருவரில் மோதியதிலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக ஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பலத்த காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பல்லேகம பகுதியை சேர்ந்த 61 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய கப் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளதுடன் ஹங்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்(இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1385

Search for people, places and things   Nagendram  Home

### ஹர்சினி

தூக்கத்தில் உன்னை நினைக்கிற காதலியைவிட



தூங்காமல் உன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் உன் தாய் சிறந்தவர்!

### சந்தியா

வீரனைப் போரிலும், யோக்கியனை கடனிலும்



மனைவியை வறுமையிலும், நண்பனை கஷ்டத்திலும் அறிந்து கொள்ளலாம்!

### சர்வா

தெரிந்தே தவறு செய்தவர்களிடம் நியாயம் கேட்காதே



அவர்கள் செய்த தவறுகளை நியாயப்படுத்த பல பதில்களை வைத்திருப்பார்கள்

### சாருகேசி

வாழ்க்கை அழுகையில் தொடங்கி அழுகையிலேயே முடிகிறது



முதல் அழுகை எப்படி வாழப்போகிறோம் என்பதையும் கடைசி அழுகை எப்படி வாழ்ந்தோம் என்பதையும் குறிக்கிறது

### சபேஷ்

வழிபாடு செய்யுங்கள் கடவுளின் அருகில் நீங்கள் செல்லலாம்



சேவை செய்யுங்கள் கடவுள் உங்களுக்கு அருகில் வந்துவிடுவார்

### சாருஜன்


செடியிலே இருக்கும் வரை தான் மலர்! உதிர்ந்து விட்டால் அது குப்பை!



உன் வாழ்வில் இல்லாத எதையும் எவரையும் குப்பை என்று ஒதுக்கிவிட்டுச் சென்று கொண்டேயிரு.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாணவர் ஒழுக்கத்தில் பாடசாலையின் பங்கு



சமூக நிறுவனங்களுள் பிரதானமான ஒரு நிறுவனமாகக் காணப்படுவது பாடசாலை ஆகும். எதிர்காலத்தில் சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கும் பாரிய பணி பாடசாலைகளின் பணி எனக் கூறின் அது மிகையாகாது. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளுடன் வையத்துள் வாழ்வதற்கு வேண்டிய சிறந்த பழக்க வழக்கங்கள், நற்பண்புகள், நற்சிந்தனைகள், ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றை இணைத்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. மாணவர் சமுதாயத்தின் ஒழுக்கம் தொடர்பாகக் கூடிய கவனமெடுப்பது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

பல பாடசாலைகளில் விரும்பத்தகாத, வேண்டத்தகாத செயற்பாடுகள் இடம்பெறுவதை ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. போதைவஸ்துபாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், நவீன தொழில்நுட்ப இலத்திரனியல் உபகாரணங்கள் மூலமான வேண்டத் தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் இன்றைய சமுதாயம் கல் வியில் அக்கறை குறைந்து உடல், உளத்தூய்மையின்றி வேண்டத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்றார் ஔவைப்பிராட்டி. உலகில் உள்ள பிறப்புக்களில் மானிடப்பிறப்பே சிறந்தது. எது நல்லது, எது கெட்டது என சிந்தித்து பகுத்தறியக்கூடியது மானிடப் பிறப்பு. இத்தகைய அரிய பிறவியெடுத்தவர்கள் நல்லொழுக்கத்துடன் கூடிய வாழ்வை வாழ வேண்டும்.

ஒழுக்கம் எனக்கூறும் போது பொதுவாக தனிநபர் சமூகம் வாழ்க்கை என்பவற்றைப் யோசிக்கின்ற, வளப்படுத்துகின்ற மனித குணப்பண்புகளாகும். இவற்றுக்கு உதாரணமாக நேர முகாமைத்துவம் பேணல், உண்மை பேசுதல், நேர்மை, தூய்மை போன்ற பல விடயங்களைக்கூறிக் கொள்ளலாம். உண்மை, நேர்மை, அன்பு இந்த மூன்றும் ஒருவரிடம் இருக்குமானால் அவரைத் தடுத்து நிறுத்தும் சக்தி உலகில் வேறு எவருக்கும் கிடையாது என்றார் சுவாமி விவேகானந்தர். மாணவர்களை சமூகமயமாக்கற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் பிரதான நிறுவனமாக பாடசாலையுள்ளது.

ஒரு மனிதன் தான் வாழும் சமூக சூழமைவிற்கு ஏற்ப இயைபாக்கம் அடைவதை சமூகமயமாக்கல் என்கிறோம். அதாவது சமூக நியமங்கள், விழுமியங்கள், நடைமுறைகள் என்பவற்றுடன் ஒத்து ஒழுகுவதாகும். மாணவர்கள் கூடிய நேரத்தை பாடசாலையிலேயே கழிக்கின்றனர். இதனால் ஆசிரியர்கள் ஒழுக்கத்துடன் கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது மற்றும் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை களைய வேண்டி தேவை பாடசாலைச் சமூகத்தை சாருகின்றது.

பாடசாலையில் ஏதாவது தவறுகள் நடைபெறுகின்றபோது அதற்கான பொறுப்பு அதிபர், ஆசிரியர்களையே சென்றடைகின்றது. பெற்றோர் அதிபர், ஆசிரியர்களை நம்பியே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர்.

பாடசாலைச் சமூகம் எனக் குறிப்பிடுகையில் முதலில் மாணவர்களின் ஒழுக்கவிழுமியம் பேணுகையில் அதிபரின் பங்கும் பணியும் பற்றி நோக்குவோம்.

☞ அதிபர் ஆளுமைமிக்க தலைவராய் இருத்தல் வேண்டும். ஆளுமைப்பண்பு எனும் போது அவரது தலைமைத்துவ பண்பு தொடக்கம் ஒழுக்கம், தொடர்பாடல் திறன் வரை உள்ளடங்குகின்றது. இவ்வாறான பண்புகள் நிரம்பப் பெற்றவராய் இருக்கும் போதுதான் அனைத்து ஆசிரியர்களையும் ஒன்று திரட்டி அவர்களுக்கான சரியான அறிவுறுத்தல்களை வழங்கி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஒழுக்க நடைமுறைகளிலும் முன்னேற்றம் காண முடியும். நல்ல விடயங்கள் இடம்பெறும் போது தட்டிக் கொடுப்பவராயும் ஆசிரியர்கள் மாணவர்களை பாராட்டுபவராயும் இருத்தல் வேண்டும். அதிபர் தன்னை தமது நடத்தையால் தலைவராக்கிக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை கண்டிப்புடன் கூடிய திருத்தங்களையும் மாற்றங்களையும் மேற் கொள்ளக் கூடியவராய் இருத்தல் வேண்டும். அதிபரின் தலைமைத்துவப் பண்பு எனும்போது ஆசிரியர்களை கண்காணித்து கணிக்கக் கூடியதிறன், மாணவர்களின் ஒழுக்கத்தை நிலைநாட்டும் திறன் என்பனவும் அவற்றுள் அடங்கும்.

☞ பாடசாலை செயற்பாடுகளில் எழும் விமர்சனங்களுக்கு பரிகாரம் காணுதல்–ஒரு சிறந்த அதிபரானவர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவியர், சமூக ஆர்வலர்கள் அனைவரினதும் கருத்துக்களையும் உள்வாங்கி தீர்மானங்கள் எடுக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு இருக்கும் பட்சத்தில் தான் தனது பாடசாலை மாணவர்கள் எவ்வாறு சமூகத்திலே நடந்து கொள்கிறார்கள் என்பது பற்றி அறியலாம். மாணவர்களின் இலைமறைகாயாய் இருக்கும் செயற்பாடுகள் வெளியே தெரியவரும் அதிபர் தன்னலம் கருதாது பாடசாலை நலனை முன்னிலைப்படுத்தி குறைகள், குற்றங்கள் மாணவர்களிடத்தில் இருக்கும் போது அவற்றை உடனேயே கண்டு தீர்வுகள் காணக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

☞ அதிபரானவர் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றவர்களுக்கு முன்மாதிரியாய் இருத்தல்.

உதாரணமாக நேர முகாமைத்துவத்தைப் பேணுவதைக் குறிப்பிடலாம். அத்துடன் வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதைக் குறிப்பிடலாம். ஆசிரியர்களை பாடசாலை காலைப் பிரார்த்தனையில் ஒழுக்கம் சார்ந்த கருத்துக்களை முன்வைக்குமாறு கூறலாம். ஒழுக்கத்தில் சிறந்து விளங்கும் மாணவனை ஆசிரியர்கள் மூலம் இனங்கண்டு அவனை ஏனைய மாணவர்கள் முன் பாராட்டலாம் அல்லது பரிசு வழங்கலாம்.

விசேட தினங்களின் போது தனது கருத்துக்களை முன்வைக்கும் போது அவற்றுடன் இணைந்து ஒழுக்கம் சார்ந்த கருத்துக்களையும் முன்வைக்கலாம்.

அடுத்து மாணவர்களின் ஒழுக்கத்தில் ஆசிரியர்களின் பங்குகள், பணிகள் என்பவற்றை நோக்குவோம்.

☞ குறிப்பாக வகுப்பாசிரியர்கள் தமது மாணவர்களின் செயற்பாடுகள், கற்றல் நடவடிக்கைகள், நடத்தைக் கோலங்கள் பற்றி அறிந்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில்தான் மாணவர்களின் பலம், பலவீனம் என்பன தெரியவேண்டி வரும். சில மாணவர்கள் கல்வியில் நல்ல நிலையில் இருந்தாலும் அவர்களின் குணப்பண்புகள் உயர்ந்தனவாகவன்றி கீழ்நிலையில் உள்ளனவாக இருக்கலாம். ஏனைய மாணவர்களின் மீது எரிச்சல், பொறாமை, பொய், திருடுதல், வன் முறைகளைப் பிரயோகித்தல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் காணப்படலாம். இவற்றை ஆரம்பத்திலேயே களைவதன் மூலம் மாணவர்களிடையே ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும்பண்பு, உண்மை பேசுதல், நேர்மை, சகோதரத்துவம் போன்ற பண்புகளை வளர்க்கலாம். இதனூடாக மாணவரிடையே ஒழுக்க பண்புகளை மேம்படுத்தலாம்.

☞ ஆசிரியர்கள் மாணவருடன் கதைக்கும்போது ஒழுக்கத்தை ஒருவன் பேணுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி எடுத்துக்கூற வேண்டும். நல்லொழுக்கத் தீர்மானம், கலாசாரமயமாதல், வாழ்க்கைக்கு வழிகாட்டல், சமூக ஒருமைப்பாடு ஏற்படும் என்பது பற்றிச் சிறப்பித்துக் கூற வேண்டும். சிறுவர்களின் நல்லொழுக்க வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பிறகே நல்லொழுக்கம் என்பது நடத்தைவிதி முறையாகும் என்கிறார். இவ் விதிகளை வளர்க்க ஆசிரியர்கள் முற்பட வேண்டும்.

மனிதனது செயலுக்கு வழிவகுக்கின்ற விழுமியங்கள் மனிதத்தன்மையினுள் நிலவுகின்ற இயற்கையான விடயமாகும் என்கிறார்.

### பாடசாலை கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கான விழுமியங்கள்

☞ பிள்ளைகளின் உடல், உள, சமூக நல்லொழுக்க வளர்ச்சிக்குத் தேவையான விழுமியக் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக சிறந்த பிரஜை ஆவதற்கு உதவ முடியும். இதனூடாக மானிடப்பாதுகாப்புக்கு சமாதானமாக, மகிழ்ச்சியாக வாழ்வதற்கு பொருத்தமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். அத்துடன் ஆசிரியர்கள் வகுப்பில் நிகழ்கால நடத்தைகளில் காணப்படும் பலவீனங்களுக்கு பரிகாரமான, பொருத்தமான ஒழுக்க விழுமியங்களை முன்வைக்க வேண்டும்.

உதாரணமாக மோதல் எனின் அதனைத்தடுக்கக்கூடிய பண்புகளான நன்னோக்கம், ஏனையோரை மதித்தல், இன்சொல் பேசுதல், ஆதரவு வழங்கல், பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற சிந்தனைகளை மாணவர் மத்தியில் வளர்க்க வேண்டும். இவற்றை நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ இணைக்கலைத்திட்டம், மறைக்கலைத்திட்டம் என்பவற்றின் ஊடாக முன்வைக்கலாம்.

☞ காலைப்பிரார்த்தனையின் போது ஒழுக்கம் சார்ந்த கதைகள், கருத்துக்களை முன்வைத்தல், காலைப்பிரார்த்தனை ஒன்றுகூடலானது மாணவர்களுக்கு இறைவனைப் பிரார்த்தனை செய்யும் வேளை மனம் சலனமற்று இருக்கும் ஒரு அமைதிப்பொழுதாகும். இவ்வேளையில் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கிய பெரியார்களின் வரலாறுகள், ஒழுக்கத்தை கடைப்பிடித்தால் வாழ்வில் முன்னேறியவர்களின் கதைகள், சிறந்து விளங்கியவர்களின் நற்சிந்தனைகள் போன்றவற்றை முன் வைக்கலாம். இவற்றுடன் சமயம் சார்ந்த கருத்துக்களை முன் வைப்பதும் சிறந்த வழியாகும்.

ஒரு ஆசிரியரானவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைப் பொறுப்புக்களை வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் உயரிய அர்ப்பணிப்புடனும் நேர்மறையுடனும் பக்கச்சார்பின்றியும் நிறைவேற்றும் போது தனது குறிக்கோளை அடைந்து கொண்டும் அதேவேளை மாணவர்களை கல்வி, ஒழுக்கம் என்பவற்றில் மிளிரச்செய்வதுடன் அவர்களை நற்பிரஜைகளாக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் ஒவ்வொருவரும் மகத்தான பணியை செய்ய பிறந்தவர்கள் என்றால் சுவாமி விவேகானந்தர். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் இக்கூற்றை மனதில் நிறுத்தச் செயற்படும்போது எதிர்கால சிறந்த சிற்பிகளை உருவாக்கும் அதேவேளை சிறந்த ஓர் சமுதாயத்தையும் படைக்க முடியும் என்பது திண்ணம்.

ஒரு நாணயத்தின் இருபக்கம் போல் காணப்படும் கல்வியையும் ஒழுக்கத்தையும் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

திருமதி.ராதிகா துஷ்யந்தன்
கல்வியங்காடு







தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தினம் கடந்த 12ஆம் திகதி பிரதேச செயலகத்தில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா செல்வின் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் பெண்கள் வலுவூட்டல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரையினை திருமதி மதன் கோசலை நிகழ்த்தினார். பெண்களின் உரிமைகள் மற்றும் சமூக மேம்பாடுகள் பற்றிய மேலும் பல சிறப்பு நிகழ்வுகள் நடை பெற்றதுடன் பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (படங்கள்: மகாலிங்கம்)

# 18 எம்.எல்.ஏக்கள் தீர்ப்பு வரும் போது தமிழக அரசு காணாமல் போய்விடும்

## டி.டி.வி.தினகரன் எதிர்பார்ப்பு

(சென்னை)

18 எம்.எல்.ஏக்கள் குறித்த தீர்ப்பு வரும்போது தமிழக அரசு காணாமல் போய் விடும் என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்தார்.



அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் சென்னையில் நேற்று நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று முதன் முதலில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதே நாங்கள்தான். அதுபோல விவசாய சங்கங்களின் அழைப்பை ஏற்று திருச்சியில் போராட்டம் நடத்தினோம். காவிரி கரை யோரம் எல்லா மாவட்டங்களிலும் போராட்டங்கள் நடத்தி வருகிறோம்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது தொடர்பாக ஆளும் கட்சியினர் ஏற்கனவே அனைத்துக்கட்சி கூட்டம் நடத்தினார்கள். பிரதமரை சந்திக்க நேரம் ஒதுக்கி தருமாறு கேட்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி ஒரு கடிதமே வரவில்லை என்று மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் சொல்கிறார். அதற்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் விளக்கம் கொடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டுக்கு பிரதமர் மோடி வந்தபோது எல்லா கட்சியினரும் கறுப்பு கொடி காட்டினார்கள். திரையுலகை சேர்ந்தவர்கள் விமான நிலையத்தில் முற்றுகையிட்டார்கள். மக்கள் நலம் சார்ந்த அமைப்புகள் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தினார்கள்.

ஆனால் மோடி இங்கு வந்து விட்டு அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட பேசாமல் சென்று விட்டார். இது தமிழ் நாடு என்கிற ஒரு மாநிலம் இந்தியாவில் இருப்பதை மோடி மறந்து விட்டாரா என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தை மோடி புறக்கணித்து விட்டாரோ, இந்திய வரை படத்தில் இருந்து தமிழ் நாட்டை எடுத்து விட்டாரோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. பிரதமர் மோடி மக்களை மதிக்கவில்லை. இதனால் அவருக்கு எதிரான போராட்டங்கள் சரியானது தான். இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் தினகரன் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி சென்றார். திருச்சி விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை தடுக்க மத்திய அரசு சட்டங்களை இன்னும் கடுமையாக்க வேண்டும். நாங்கள், பா.ஜ.கவோடு கூட்டணி அமைக்க போவதாக கூறுவது தவறு.

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் தொடங்குவதற்கு முன்பே நாங்கள் தெளிவாக கூறி இருக்கிறோம். எங்கள் இயக்கம் ஜெயலலிதா வழியில் மதச்சார்பற்ற நிலையில் தான் தொடரும். மதவாத சக்திகளுடன் எப்போதும் கூட்டணி கிடையாது. தமிழகத்தில் ஒரு அரசு செயற்படுகிறதா என்று தேடி கண்டுபிடிக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையில் இவர்கள் உள்ளாட்சித் தேர்தலை எப்படி நடத்துவார்கள்? பா.ஜ.க. வால்தான் அ.தி.மு.க. இன்று படுபாதாளத்தில் இருக்கிறது. பா.ஜ.கவுடன் நெருங்கி செல்வதாகவும், அவர்களை கண்டு பயப்படுவதாகவும், பதுங்குவதாகவும் சிலர் கூறுவது தவறு. எடுத்த முடிவில் இருந்து ஒருபோதும் பின் வாங்கமாட்டேன்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று தான் தமிழக மக்களும், எதிர்க்கட்சிகளும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அனைவரும் ஒரே இலக்கை நோக்கி தான் போராடுகிறோம். அதற்காக ஒன்றாக இணைந்து போராட வேண்டும் என்ற அவசியம் இல்லை. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி போராடியவர்கள் மீது இந்த அரசு வழக்கு பதிவு செய்து வருகிறது. இவர்கள் இதை தவிர வேறு என்ன செய்ய முடியும். வைக் கோல் போரில் செய்த பொம்மை போல் இந்த அரசு உள்ளது.

18 எம்.எல்.ஏக்கள் குறித்த தீர்ப்பு வரும்போது, இந்த அரசு எங்கு இருக்கிறது என்றே தெரியாமல் போய்விடும். தமிழக மக்களை நிம்மதியாக வாழவிடாமல் செய்வதே மத்திய அரசுதான். தண்ணீர் உரிமையை கூட அவர்களால் பெற்றுத்தர முடியவில்லை. அடுத்தமுறை தேர்தல் வரும்போது, பா.ஜ.க. வினருக்கு மக்கள் தக்க பதிலை தருவார்கள். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நாங்கள் காவிரி கரையோர மாவட்டங்களில் போராட்டம் நடத்த உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இன்று முதல் மேலதிக பேருந்து சேவைகள்

(கொழும்பு)

புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்கு சென்ற பொதுமக்கள் மீண்டும் கொழும்பு உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு வருகை தருவதற்காக, செல்வதற்காக இன்று முதல் மேலதிக பேருந்து சேவைகள் இடம் பெறும் என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையின் பிரதேச அலுவலகங்கள் மூலம் இந்த பேருந்து சேவைகள் இடம்பெறவுள்ளன.

இது குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் எம்.பி.ஏ. ஹேம சந்திர கருத்து தெரிவிக்கையில், சொந்த இடங்களுக்கு சென்ற பொது மக்கள் மீண்டும் திரும்புவதற்காக 24 ஆம் திகதி வரையில் மேலதிக பேருந்து சேவைகள் இடம் பெறும் என்று தெரிவித்தார். (இ-7)

# பத்து வயதுச் சிறுமி இருப்பதால் பா.ஜ.க. வாக்குகேட்டு வரவேண்டாம்

## மோடி அரசிற்கு எதிரான பதாதைகளால் பரபரப்பு

(கொழிஞ்சாம்பறை)

கேரளாவில் வீட்டில் 10 வயது சிறுமி இருப்பதால் பா.ஜ.க. வாக்கு கேட்க வர வேண்டாம் என்று வீடுகளில் காட்சிப்படுத்தப்பட்ட பதாதைகளால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



கேரள மாநிலம் ஆலப்புழை அருகே செங்கன்னூரில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் காஷ்மீர், உ.பி. பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களால் அதிர்ச்சி அடைந்த கேரளாவின் செங்கன்னூர் தொகுதி மக்கள் பா.ஜ.கவுக்கு எதிராக வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கதவின் வெளியே காட்சிக்கு வைத்துள்ளனர்.

ஒரே இரவில் அனைத்து வீடுகள் மற்றும் கட்டடங்களில் காட்சிப்படுத்தப்பட்ட பதாதைகளில் எழுத்துகளில் வித்தியாசங்கள் உள்ளன. அதாவது, இந்த வீட்டில் 10 வயதுக்குட்பட்ட சிறுமி இருக்கிறாள், வாக்கு கேட்க பா.ஜ. கவினர் உள்ளே வர வேண்டாம் கதவுக்கு வெளியே நில்லுங்கள் என்று எழுதப்பட்டிருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சிறுமி படுகொலை குறித்து கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கூறும் போது, பாலியல் வன்கொடுமை செய்து 2 சிறுமிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் உலக அரங்கில் இந்தியாவை தலைகுனிய செய்துள்ளது.


இந்த சம்பங்களில் பா. ஜனதா ஆதரவாளர்கள் தொடர்பில் இருப்பது வெட்கக் கேடானது. ஆனால் அது குறித்து அக்கட்சியின் தலைமை எந்த அறிக்கையும் வெளியிடாதது மனதை புண்படுத்துவதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் கோழிக் கோட்டை சேர்ந்த ரஜித் ராம் தனது பெண் குழந்தைக்கு பெயர் சூட்ட முடிவு செய்தார். பெயர் குறித்து தேர்வு செய்யும் போது காஷ்மீர் சிறுமியின் கொடூரச்சாவு குறித்த தகவல்கள் வெளியானது. இது அவரது மனதை புண்படுத்தியது. இனி உலகில் இதுபோன்ற சம்பவம் நடைபெறக்கூடாது. சிறுமியின் நினைவாக தனது மகளுக்கு ஆசிபா என்று பெயர் சூட்டியுள்ளார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## கரடி தலையில் தர்பூசணி



நரியாரே!

அந்த தர்ப்பூசணி என்ன விலை?

"அதுவா! இருபது ரூபாய். கரடியாரே நீங்கதான் ரொம்ப சிக்கனம் பார்ப்பவராச்சே. தர்ப்பூசணி வாங்க வந்திருக்கீங்க" எனக் கேட்டது நரி.

"புதுசா ஒரு சட்டம் வந்திருக்கே, அது உங்களுக்குத் தெரியாதா?" என பதிலுக்கு கேள்விக் கேட்டது கரடி.

"என்ன சட்டம்? தினமும் தர்ப்பூசணி வாங்கணும்னா?" எனக் கேலியாகக் கேட்டது நரி.

"அட! இல்லை நரியாரே! வாகனம் ஓட்டுறவங்க கட்டாயமா தலைக்கவசம் போடணுமாம்" என்றது கரடி.

"ஓ! அந்தச் சட்டமா? நல்ல சட்டம்தானே. அப்போதானே விபத்துகள் குறையும்" என்றது நரி.

"அது சரி. உங்ககிட்ட வண்டி இல்லை. நீங்க ஈஸியா சொல்லிட்டிங்க. என்கிட்ட வண்டி இருக்கே" என அலுத்துக் கொண்டது கரடி.

"சரி கரடியாரே! தலைக்கவசம் வாங்கிட்டீங்களா, இல்லியா?"

"அதற்குத்தான் இங்கே வந்திருக்கேன்" என்றது கரடி.

"என்னது! தலைக்கவசம் வாங்க பழக்கடைக்கு வந்திருக்கீங்க, என்ன கரடியாரே அடிக்குற வெயில்ல மூளை குழம்பி போய்டுச்சா?" எனக் கேலி பேசியது நரி.

"கோபப்படாதீங்க நரியாரே! நான் வண்டி ஓட்டுறதே வாரத்துக்கு ஒருமுறையோ, இருமுறையோதான். அதுக்காக 700, 800 நூறு ரூபா கொடுத்து தலைக்கவசம் வாங்கணுமா? அதான் இந்த தர்ப்பூசணியை வாங்க வந்தேன்" என்றது கரடி.

"கரடியாரே! நீங்க சொல்றது எனக்குப் புரியவே இல்லை. கொஞ்சம் புரியும்படிதான் சொல்லுங்களேன்" எனக் கேட்டது நரி.

"புரியும்படியே சொல்றேன். நான் வாங்குற இந்த தர்பூசணியை நல்லா சுத்தம் செஞ்சிட்டு தலைக்கவசமாக பயன்படுத்தப்போறேன். வண்டி ஓட்டுறப்போ தலையில மாட்டிக்குவேன். மீதி நாள்ல ஃபிரிட்ஜில வைச்சிடு வேன். இப்போதெல்லாம் இது போன்ற தலைக்கவசங்கள் கடைகள்ல நிறைய கிடைக்கின்றன. அதனால பொலிஸ்காரங்கள ஈஸியா ஏமாத்திடலாம்" என்றது கரடி.

"அட! பொல்லாத கரடியாரே. நீங்க அவுங்கள ஏமாற்ற நினைச்சால், நீ தான் ஏமாந்து போவீங்க" என்றது நரி.

"சரி சரி. பேசியே என்னோட நேரத்தை வீணாக்காதீங்க. ஒரு பழத்தைக் கொடு" என்று கூறி வாங்கிக்கொண்டு போனது கரடி.

இரண்டு நாட்களுக்குப் பிறகு!

வெளியே செல்ல தனது குட்டிக்கரடியை வண்டியின் முன்னே உட்கார வைத்துக் கொண்டது. தயாராக வைத்திருந்த தர்ப்பூசணி தலைக்கவசத்தைத் தலையில் மாட்டிக்கொண்டு புறப்பட்டது கரடி.

முந்தைய நாள் பெய்திருந்த மழையால் சாலையெங்கும் ஒரே தண்ணீர். எதிரே இருந்த பள்ளத்தைக் கவனிக்காமல் கரடி ஓட்டி வந்த வாகனம், பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. அந்த வேகத்தில் கரடி தூக்கி எறியப்பட்டது. கரடி விழுந்த வேகத்தில் தலையில் போட்டிருந்த தரப்பூசணி சுக்கல் சுக்கலானது. கரடியின் மண்டை உடைந்து இரத்தம் பெருக்கெடுத்தது. குட்டிக் கரடி சிறிய காயத்துடன் தப்பியது.

அருகிலிருந்தவர்கள் இருவரையும் மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு வந்த பொலிஸ்காரர்கள், தலைக்கவசம் என தர்ப்பூசணியைப் போட்டுக் கொண்டு ஏமாற்றியதாக கூறி அபராதம் விதித்தார்கள்.

கரடி விபத்துக்குள்ளான செய்தியைக் கேள்விப்பட்டு, மருத்துவமனைக்கு வந்தது நரி.

நரியைக்கண்டதும், "வாங்க நண்பரே! எழுநூறு ரூபாய்க்காக சிக்கனம் பார்த்தேன். இப்போது மருத்துவ செலவு, அபராதச் செலவு என எல்லாம் சேர்ந்து நாலாயிரம் ரூபாய் ஆகிடுச்சி" என்று கண்ணீர் விட்டபடியே கூறியது.

"கரடியாரே! சாலை விபத்துகளைத் தடுக்கவும், இறப்புகளையும் தவிர்க்கவும்தான் தலைக்கவசம் போடச் சொல்லி உத்தரவு போடுறாங்க. நம்ம நல்லதுக்குத்தானே சொல்றாங்க. அதை விட்டுவிட்டு இப்படி ஏமாற்ற நினைக்கலாமா" என அன்பாக அறிவுரை சொன்னது.

"நீங்க சொல்வது உண்மைதான் நரியாரே. குட்டிக்கரடியும் பல முறை தலைக்கவசத்தின் அவசியத்தைச் சொல்லுச்சி. இப்போதுதான் சரியாகப் புரிந்து கொண்டேன். இனி இது போன்ற தவறைச் செய்ய மாட்டேன்" என்றது கரடி.

முற்றும்



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

16.04.2018

- 1346-தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய சேர்பியப் பேரரசு டுசான்சில்னி என்பவனால் உருவாக்கப்பட்டது.
- 1444-இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் ஐந்து ஆண்டுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.
- 1582-ஸ்பானிய ஆக்கிரமிப்பாளன் ஹெர்னாண்டோ டி லேர்மா என்பவன் ஆர்ஜெண்டீனாவின் சால்ட்டா என்ற குடியேற்றத் திட்டத்தை கண்டுபிடித்தான்.
- 1853-இந்தியாவின் முதலாவது பயணிகள் தொடருந்து சேவை பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1876-பல்கேரியாவில் ஓட்டோமான் பேரரசுக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1966-முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் ஆரம்பமானது.
- 2007-ஐக்கிய அமெரிக்காவின் வேர்ஜீனியா பல்கலைக்கழகத்தில் கொரிய மாண வன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழகப் பேராசிரியர் லோகநாதன் உட்பட 33 பேர் கொல்லப்பட்டு 29 பேர் காயமடைந் தனர்.

### பிறப்புகள்

- 1660-ஹேன்ஸ் ஸ்லோன், ஐரிய-ஆங்கிலேய மருத்துவர் (இ.1753)
- 1813-சுவாதித் திருநாள் ராம வர்மா, திருவிதாங்கூர் சமத்தான மன்னர் (இ. 1846)
- 1851-பொன்னம்பலம் இராமநாதன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1930)
- 1867-ரைட் சகோதரர்கள், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் (இ. 1912)
- 1889-சார்லி சாப்ளின், ஆங்கிலேய நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் (இ.1977)
- 1953-நிழல்கள் ரவி, தென்னிந்தியத் திரைப் பட நடிகர்

### இறப்புகள்

- 1972-யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர் (பி.1899)
- 2007-கோ. வா. உலோகநாதன், இந்திய-அமெரிக்கப் பொறியியலாளர், கல்வியாளர் (பி.1954)
- 2013-சார்லஸ் புரூசன், ஜிப்ரால்ட்டர் அரசியல்வாதி (பி.1938)
- 2013-எல். கே. பி. லகுமையா, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், காந்தியவாதி (பி. 1913)

### சிறப்பு நாள்

- உலகக் குரல் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனாமடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 | 50 | 50 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 90 | 72 | 90 | 70 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 30 | 40 | 50 | 50 | 80 | 60 |
| தக்காளி | 30 | 30 | 20 | 30 | 40 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 40 | 30 | 40 | 25 |
| கோவா | 20 | 35 | 35 | 40 | 50 | 60 | 30 |
| கரட் | 120 | 100 | 80 | 100 | 80 | 240 | 100 |
| பூசணி | 30 | 20 | 30 | 50 | 30 | 40 | 45 |
| புடோல் | 50 | 60 | 30 | 80 | 40 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 180 | 150 | 150 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 58 | 70 | 60 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 75 | 160 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 60 | 60 | 100 | 60 |
| கருணைக்கிழங்கு | 40 | 100 | – | 50 | 40 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 40 | 80 | 60 | 80 | 120 |
| லீக்ஸ் | 180 | 200 | 120 | 140 | 100 | 300 | 200 |
| பீற்றூட் | 30 | 40 | 30 | 40 | 50 | 60 | 40 |
| குறிமிளகாய் | 100 | 100 | 40 | 60 | 70 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 150 | 240 | 150 | 240 | 400 |
| போஞ்சி | 100 | 150 | – | 80 | 80 | 200 | – |
| கத்தரிதும்புள்ள | 40 | – | – | 30 | – | 50 | 70 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 20 | 30 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 250 | 250 | 180 | 220 | 150 | 200 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 30-60 | 90 | 60 | 75 | 90 |
| இராசவள்ளி | 200 | 150 | – | – | 140 | 140 | 180 |
| வெங்காயப்பூ | 140 | – | – | – | – | – | – |
| முள்ளங்கி | 50 | – | 30 | 40 | 40 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 45 | – | 10 | 30 | 30 | 30 | 35 |
| வல்லாரை | 15 | – | 10 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | – | – | – | – | – | 80 | – |

நீதியே ஆட்சியின் உயிர். நடுநிலைமையே நீதியின் உயிர்.
- ஜஸ்டினியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அப்பாவின் வருகையை பார்த்திருக்கும் குஞ்சுகள்

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு அன்பு வணக்கம்.

வழமையில் தங்களுக்குக் கடிதம் எழுதுவதைத் தவிர்த்து வந்தோம்.

எனினும் புத்தாண்டில் ஆனந்தசுதாகரன் உங்களோடு இருப்பார் என்று அவரின் பிள்ளைகளுக்கு நீங்கள் கூறிய உறுதிமொழியை நினைவுபடுத்துவதற்காகவும் நீங்கள் கூறிய உறுதிமொழியை நிறைவேற்ற முடியாமல் போனது ஏன்? என்பது தெரியாததன் காரணமாகவுமே இக்கடிதத்தை தங்களுக்கு எழுதத் தலைப்பட்டோம்.

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களே! ஆனந்தசுதாகரன் ஆயுள் தண்டனை பெற்ற ஒரு தமிழ் அரசியல் கைதி. அவரின் மனைவி அண்மையில் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார்.

இரண்டு பிள்ளைகள். மிகச் சிறிய வயது. தந்தை சிறையில்; தாய் இறந்து விட்டார். இந்நிலையில் அந்தப் பிள்ளைகள் அநாதைகளாகியுள்ளனர்.

இது விடயம் தொடர்பாகத் தாங்கள் அனைத்தும் அறிந்திருந்தீர்கள். ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் உங்களைச் சந்தித்தனர். நீங்களும் நெகிழ்வோடு அந்தப் பிள்ளைகளை அரவணைத்தீர்கள்;

உங்கள் தந்தை ஆனந்தசுதாகரன் வருகின்ற தமிழ் – சிங்கள புத்தாண்டில் உங்களோடு இருப்பார் என்று கூறி, அந்தப் பிள்ளைகளை ஆற்றுப்படுத்தினீர்கள். அந்தப் பிள்ளைகளும் நம்பிக்கையோடு தந்தையின் வரவைப் பார்த்திருந்தனர்.

தமிழ் – சிங்கள புத்தாண்டு வந்தது. ஆனால் தந்தை ஆனந்தசுதாகரன் வரவில்லை. இந்த நிலைமை அந்தப் பிள்ளைகளுக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை நெகிழ்ந்த மனம் படைத்த தங்களுக்கு எவரும் எடுத்தியம்பத் தேவையில்லை என்பது நம் தாழ்மையான கருத்து.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களே! சைவ சமயத்தில் ஒரு கதையுண்டு.

ஒரு காட்டில் பன்றி ஒன்று பன்னிரண்டு குட்டிகளை ஈன்றது. இரை தேடிச் செல்லும் வழியில் ஒரு வேடுவன் அந்தப் பன்றியைக் கொன்று விட்டான்.

தாயை இழந்த பன்றிக் குட்டிகள் பசியால் வருந்தின. இதனைப் பார்த்த சிவன் அந்தப் பன்றிக் குட்டிகள் மீது இரக்கம் கொண்டார். தாய்ப் பன்றியாக உருவெடுத்து அந்தப் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தார்.

இந்தக் கதை சிவனின் அற்புதத்தை உணர்த்தும் பொருட்டுக் கூறப்பட்டதல்ல. மாறாக தாயின் பாசத்தை தாயால் மட்டுமே வழங்க முடியும் என்ற உண்மைத் தத்துவத்தை உணர்த்துவதற்கேயாம்.

ஆக, தாயை இழந்த அந்தச் சின்னஞ்சிறுசுகளைக் கவனிப்பதற்கு யார் இருந்தாலும் கூடவே தந்தை இருந்தால் அந்தப் பிள்ளைகளின் கவலை, துன்பம், தாயை இழந்த வேதனை ஆறுமல்லவா.

ஆகவே, நீங்கள் கூறிய வார்த்தையை நம்பியபடி தந்தையின் வருகையை படலை வழி பார்த்திருக்கும் அந்தக் குஞ்சுகளின் ஏக்கத்தை தீர்த்து வையுங்கள்.

# எம்மை வேறு சமூகத்தினர் தலைமை தாங்க முடியாது

## மா.உறு. லிங்கநாதன் தெரிவிப்பு

வவுனியாவில் பெரும்பான்மையினரான எம்மை வேறு சமூகத்தினர் தலைமை தாங்க முடியாது என வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா - கற்குளத்தில் அமைக்கப்படவுள்ள அறிவொளி சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “வவுனியா நகரசபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகியன வேறு சமூகத்தவர்களின் கைகளில் போகும் நிலை காணப்படுகின்றது.

வவுனியாவில் 82 வீதமாக இருக்கின்ற நாம் ஏனைய சமூகத்தவர்கள் எம்மை தலைமை தாங்க விட முடியாது.

வவுனியாவில் ஐந்து உள்ளூராட்சி மன்றங்களில் சிங்களவர்களுக்கென தனியான ஒரு பிரதேச சபை உள்ளது.

அங்கு தமிழ்க் கட்சிகள் எவையும போட்டியிடவில்லை.

ஆனால் அவர்கள் தேசிய கட்சி என்ற ரீதியில் எமது பிரதேசங்களில் எம்மவர்களையே போட்டியிட வைத்து எம்முள் பிளவுகளை ஏற்படுத்துகின்றனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னர் வடக்கு கிழக்கு பிரதேசங்களை அபகரிக்கும் நோக்கோடுதான் அரசுகள் செயற்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாகத்தான் தமிழ் பிரதேசமான அம்பாறையை இழந்தோம்.

தற்போது திருகோணமலையை இழந்து கொண்டிருக்கின்றோம். அதனையடுத்து வவுனியாவும் இழக்கப்படலாம்.

எனவே கடந்த உள்ளூராட்சி தேர்தலின் பின்னராவது நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நீங்களே உங்களது வேட்பாளர்களை தீர்மானிப்பவர்களாக இருக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (மு-1)

## நெடுங்கேணி விபத்து இருவர் காயம்

வவுனியா - நெடுங்கேணி ஐயன்கோவில் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் பெண் உட்பட இருவர் காயமடைந்தனர். வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற பேருந்தின் மீது, பின்புறமாக மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இதில் வவுனியா கன்னாட்டி பிரதேசத்தை சேர்ந்த ஜெகசோதி (வயது-60) என்ற பெண்ணும்மோ. சைக்கிளை செலுத்திய இளைஞனுமே காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மு-1)

## இந்தியர் ஒருவர் கைது

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் இலங்கை வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோதர ராஜமல்வத்த பகுதியில் நேற்றுமுன்தினம் இவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

52 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு-1)

## புதிய அமைச்சரவை தொடர்ந்தும் இழுபறி

ஐக்கிய தேசியக் கட்சி, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட புதிய அமைச்சரவை சித்திரைப் புத்தாண்டுக்கு பின்னர் பதவியேற்கும் என கூறப்பட்டபோதும், இரு கட்சிகளுக்கிடையேயும் முரண்பாடுகள் தொடருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வாக்களித்த ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 16 பேர் அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளதால் கட்சிக்குள் மேலும் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.

இதனால் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து புதிய அமைச்சரவையை அமைப்பதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மீண்டும் சந்தித்துப் பேசிய பின்னரே புதிய அமைச்சரவை பதவியேற்கும் என்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் 22 ஆம் திகதி தாயகம் திரும்பியதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசுவார் என்றும் அதன் பின்னரே புதிய அமைச்சரவை பதவியேற்கும் எனவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவுள்ள உறுப்பினர்கள் சிலரின் ஆதரவுடன், ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்படுகின்றன என்று மற்றுமொரு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் புதிய அமைச்சரவை இம்மாத இறுதியில் பதவியேற்கும் சாத்தியம் இல்லையென ஐக்கிய தேசிய கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (மு-1)

## கின்னஸ் சாதனைக்கு முயற்சி

நுவரெலியாவில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றில், உலகின் மிக நீளமான உருளைக் கிழங்கு கேக் தயாரித்து கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனை நேரில் சென்று நேற்று பார்வையிட்டுள்ளார்.

380 கிலோ கிராம் நிறையுடைய இந்த கேக் 111 மீற்றர் நீளத்தை கொண்டுள்ளது. (மு-1)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்





### புகுவிழாவில் காலையில் செய்யும் பூஜைகள் எவை?

மனைபுகு நாளில் பசுவை கன்றுடன் அழைத்துவந்து அவற்றின் முகம், கொம்பு, முதுகு, வால் ஆகிய இடங்களில் குங்குமம் இட்டு வேட்டியை பசுவின் மீது சாற்றி துண்டினைக் கன்றின் மீது போடவும். (இவ்வேட்டியும் துண்டும் பசுவின் உரிமையாளருக்குப் போகும். வேட்டியும்துண்டும்மாட்டு உரிமையாளருக்குத்தானே போகின்றது என்று தரம் குறைவானதை வாங்க வேண்டாம்)

கோபூஜை முடிந்தவுடன் அரிசி, வெல்லம், வாழை இவற்றைப் பிசைந்து ஊட்டி வீட்டினுள் பசுக்கன்றை அழைத்து வரவும். கோமாதா உள்ளே நுழையும் போது தாமரை, விசிறி, வலம்புரி, சங்கு, கண்ணாடி, நெய், நீர்குடம், காமாட்சி அம்மன் விளக்குடன் மங்கள வாத்தியம் கொண்டு வரவேற்க வேண்டும். *(தொடரும்)*

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனமும் பிரம்மம்



மனிதனின் பருவுடலைப் பற்றி ஆராய்வோம். பலகோடி விண் துகள்கள் கூடிய ஒரு கூட்டுத் தோற்றமே பருவுடல். விண் என்பது இறை வெளியே - தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தத்தால், திணிவு பெற்று, ஒரு புள்ளி வடிவத்தோடு சுழன்றியங்கும் அலை இயக்கம். எனவே, இறைநிலையே விண்ணாகி, விண் கூட்டுச் சேர்க்கையால் ஏற்பட்ட கோடிக்கணக்கான பரு உருவத் தோற்றங்களில் ஒன்றாகப் பருவுடல் விளங்குகின்றது. ஆறாவது அறிவான நுண்மாண் நுழைபுலனறிவால் நாம் உணரும் போது, பருவுடல் பிரம்மமாகவே விளங்குகின்றது. அடுத்து உயிர் என்பதைப் பற்றி ஆராய்வோம்.

கோடிக்கணக்கான விண்துகள்கள் பரு உடலுக்குள் சூக்குமமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. விண் என்பது இறைவெளியின் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்த விளைவான சுழலைதானே? எனவே, விண் துகளான உயிரையும் பிரம்மமாகவே உணர்கிறோம். மூன்றாவதாகக் காந்த ஆற்றலின் அலை நிலையான மனம் என்பது என்னவென்று சிந்திப்போம். இறைநிலையிலுருந்து தோன்றிய விண், விரைவாகத் தற்சுழற்சியாக இயங்கும்போது, அதைச் சுற்றியுள்ள இறைவெளியின் சூழ்ந்தழுத்த ஆற்றலால் விண்ணுக்கும், இறைவெளிக்கும் இடையே ஏற்படும் உரசலால் எழும் நுண்ணலைகள் காந்தம் எனப்படும்.

இந்தக் காந்தமானது, பஞ்ச பூதங்களாகிய விண்கூட்டு அடர்த்தி நிலைகளான விண்வெளி, காற்று, அழுத்தக்காற்று, நீர், நிலம் இவற்றில் முறையே அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாகத் தன்மாற்றம் பெறுகிறது. இவ்வைந்து வகையான காந்தத் தன்மாற்றங்களை பஞ்சதன்மாத்திரை என்று கூறுகிறோம். இதே காந்தமானது உயிர் உடல்களில் மேலே கூறப்பெற்ற ஐந்து மாற்றங்களோடு, உணர்வு ஆற்றலுடைய அலை நிலையான மனமாகவும் திகழ்கின்றது. இங்கு மனமும் பிரம்மமே என்று உணர்கிறோம்.

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் நியூஸ்ரார் அணி வெற்றி



கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்கான வெள்ளி விழா தொடரின் 5 ஆவது போட்டி கடந்த சனிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதான்த்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான போட்டியில் நியூஸ்ரார் அணி, டிறிபேக் ஸ்ரார் அணியை 3 இலக்குகளால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப் பெடுத்தாடிய டிறிபேக் அணி 27 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. பிரவீன்-12, தர்ஸன்-39, பார்த்தீபன்- 80, மார்க்சிங்-27 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் நியூஸ்ரார் சார்பாக தீபன்-3, பிரசாத்-2, மோகன் - 4, ராசேந்திரம்-1 இலக்கினைக் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 27.3 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றனர். தீபன் - 25, கபில்-37, ராசேந்திரம் ஆட்டமிழக்காது-23, மோகனதீபன்-21, கஜேநதிரா-1, கிரிசாந்-10 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் டிறிபேக்ஸ்ரார் சார்பாக பார்த்தீபன், சங்கீதன், பிரதீப் தலா 1 இலக்கினையும் மார்க் சிங்-4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு நியூஸ்ரார் அணி 6.20 புள்ளிகளையும், டிறிபேக் ஸ்ரார் அணி 2.59 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)

SPORTS வலம்புரி விளையாட்டுச் செய்திகள்

# வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தவில்லை மும்பை அணிவீரர் தனஞ்சய




டெல்லி அணிக்கெதிரான போட்டியில் மும்பை வீரர் அகில தனஞ்சய விக்கெட் எதுவும் எடுக்காமல் ஓட்டங்களை வாரி வழங்கியதால் ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

டெல்லி - மும்பை அணிகளுக்கிடையேயான ஐபிஎல் தொடரின் 9-வது லீக் போட்டி நேற்று முன்தினம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

மும்பை மைதானத்தில் சுழற்பந்து எடுபடும் என்பதால் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சா மும்பை அணிக்காக ஆடும் அணியில் இருந்தார்.

அதன்படி முதலில் ஆடிய மும்பை அணி 7 விக்கெட் இழப்பிற்கு 194 ஓட்டங்கள் எடுத்தது. இதன் பின் 195 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணிக்கு ராய், நாலா புறமும் அதிரடி காட்ட அந்த அணி 20 ஓவரில் 195 ஓட்டங்கள் எடுத்து முதல் வெற்றியை பதிவு செய்தது.

இப்போட்டியில் மும்பை அணியின் தலைவரான ரோகித் சர்மா சுழற்பந்து வீச்சாளரான அகிலதனஞ்சயவுக்கு முதல் பாதியிலே வாய்ப்பு கொடுத்தார்.

ஆனால் அகில தனஞ்சயவின் பந்தை அசால்டாக எதிர்கொண்ட டெல்லி அணி வீரர்கள், ஒரு விக்கெட் கூட கொடுக்காமல் அவரின் மொத்த 4 ஓவரில் 47 ஓட்டங்கள் விளாசினர்.

இப்போட்டியில் சுழற்பந்தில் தனஞ்சயவையே மும்பை அணி அதிகம் நம்பி யிருந்த நிலையில், அவர் ஏமாற்றியது அந்த அணிக்கு மட்டுமன்றி ரசிகர்களுக்கும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# தல டோனியின் சொக்லேட் சிலை



சென்னையில் உள்ள சொக்லேட் நிறுவனம் தல டோனிக்கு சொக்லேட்டால் ஆன சிலை ஒன்றை உருவாக்கியுள்ளது.

ஐபிஎல் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் தற்போது நடைபெற்று வருகிறது.

இதில், இரண்டு ஆண்டுகள் தடைக்குப் பிறகு டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி விளையாடி வருகிறது.

இந்நிலையில் தலடோனிக்கு சொக்லேட்டால் செய்யப்பட்ட சிலை ஒன்றை சென்னையை சேர்ந்த சொக்லேட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

386 கிலோ கிராம் எடையில், 5 அடி 9 அங்குலத்தில் டோனியின் உருவத்தை சிலையாக உருவாக்கியுள்ளனர். இதற்கு அவர்களுக்கு 151 மணி நேரம் தேவைப்பட்டுள்ளது. (க)



வியாபாரிமூலை கலைமணி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் உபயகதிர்காமம் UK விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. புதுவருடத்தை முன்னிட்டு கலைமணி வி.கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பல பலம் வாய்ந்த அணிகள் மோதிக் கொண்டன. இதில் இறுதிப் போட்டியில் உபயகதிர்காமம் UK வி.கழகம் மற்றும் மாதனை வி.கழகம் மோதின, இதில் UK அணி 38:20 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கியது. (க-60)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# புத்தாண்டு வாழ்த்துக்கள் சண்டிமலின் டுவிட்



உலகம் முழுவதும் சித்திரை முதல் நாளான நேற்று தமிழ் புத்தாண்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முக்கிய பிரபலாங்கள் பலரும் பாரம்பரிய உடைகளான சேலை மற்றும் வேட்டி போன்றவைகளை அணிந்து தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான தினேஷ் சண்டிமல் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த ஆண்டு மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதில் மனைவியுடன் சேர்ந்து கும்பிட்டது போல் இருக்கும் புகைப்படத்தை பதிவேற்றம் செய்துள்ளார். (க)

# கொல்லன் கலட்டி மீள் எழுச்சி கழகத்தின் புதுவருட கொண்டாட்ட கலை நிகழ்வுகள்







வருடத்தினை சிறப்பாக வரவேற்ற கொல்லன் கலட்டி மீளெழுச்சி கழகத்தின் விளையாட்டு விழா கொல்லன் கலட்டி கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள மைதானத்தில் கழக தலைவர் சிறிவர்ஷன் தலைமையில் புதுவருடபிறப்பன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமாகியது. பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவசிறி கலந்து சிறப்பித்தார்.

ஆலயத்திலிருந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு ஆரம்ப வைபவங்கள் இடம் பெற்று போட்டி ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர் நிகழ்வான பழம் பொறுக்கல், ஓட்டநிகழ்வு குறுந்தூர வீதி ஓட்டம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்களாக தேங்காய் திருவல் போட்டி, கிடுகுபின்னல்போட்டி, கழகங்களிற்கிடையிலான கயிறிழுத்தல், ஆண்--பெண்களிற்கான தயிர் முட்டி அடித்தல் தலையணை சண்டை சங்கீத கதிரை போன்ற நிகழ்வுகளும் சாதாரண தரப் பரீட்சை சித்தி அடைந்த மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. விசேட நிகழ்வாக இரவு 8 மணியளவில் சண்டிலிப்பாய் இன்னிசை குழுவின் இன்னிசைகான நிகழ்வு நடைபெற்றது. விடேச நிகழ்வாக மின்னொளியிலே கிறிஸ்கம்பம் ஏறும் போட்டி நடைபெற்று அனைவரது கவனத்தையும் தனாவசப்படுத்தியது. (க)

## காலநிலை காரண...

அதிகரிப்பு ஏற்படலாம் என சுகாதார தரப்பினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய காலநிலை டெங்கு நோய் பரவலுக்கு சாதகமாக அமைவதனால், டெங்கு நோய் பரவலில் அதிகரிப்பு ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஏப்ரல், மே மாத காலப்பகுதியில் வருடாந்தம் டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாவதாக சுகாதார தரப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் 15 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்தில் 1 லட்சத்து 86 ஆயிரம் பேர் டெங்குத் நோயினால் பாதிக்கப்பட்டதுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## தமிழர் அரசியலில்...

யில் உள்ள தமிழ் மக்களிடையே ஒரு பெயரை பெற்று விடக்கூடாது என்ற எண்ணம் ஐ.தே.க விடம் உள்ளது.

அண்மையில் மங்கள சமரவீரவின் கருத்தும் அதனையே கூறுகின்றது. எனினும் மோசமான அரசு வந்துவிடும் என்ற காரணத்தினால் தான் அரசை காப்பாற்றியிருக்கின்றோம். வேறு வழி இல்லை, இவ்வாறு ஆதரவு வழங்கும் போது நிபந்தனைகள் எவையும் விதிக்கப்படவில்லை. கடந்த காலங்களில் கூறி வந்தவற்றை வலியுறுத்தியுள்ளார்கள், நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை.

அவ்வாறு இவர்கள் எமக்கு வாக்குறுதிகளை தந்தாலும் வாக்குறுதிகளை நிறைவேற்ற அவர்கள் மாகாத்மா காந்திகளோ புத்தர்களோ இல்லை. தமிழர் தரப்பிலிருந்து பலம் வாய்ந்த தமிழர் கட்சிகள் உருவகி விடக்கூடாது என்பதில் அக்கறையாக இருக்கின்றனர். அவ்வாறு இருந்தாலும் அவர்களுக்கு சார்பாக இருக்க வேண்டும் என்று கருதுகின்றார்கள்.

தமிழர்கள் கடத்தி செல்லும் போது தமிழ்த் தலைவர்கள் யாருமில்லை, இன்று பேசுபவர்கள் அன்று இல்லை என அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஐ.தே.க விற்கு ஆதரவாக தான் செயற்படுகின்றதா? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை. (மு-4)

## பொதுநலவாய...

வுள்ளது.

இந்த நிலையில், அதில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மதியம் பிரித்தானியா நோக்கி பயணமானார்.

இந்த மாநாட்டில் 53 நாடுகளின் தலைவர்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டின்போது, ஜனாதிபதி பிரித்தானிய பிரதமர் தெரேசா மே உள்ளிட்ட அரச தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## கரணவாயில் குழுக்க...

வில் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களை அழைத்துக்கொண்டுவந்து குழு மோதலில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் படுகாயமடைந்த மந்துவில் மற்றும் இயற்றாலையை சேர்ந்த இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும், சோழங்கன் மற்றும் மலையான்தோட்டத்தை சேர்ந்த இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணையினை மேற்கொண்டுவந்த நெல்லியடி பொலிஸார் சோழங்கன் பகுதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்து நேற்று பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்திய போது சந்தேக நபரை பிணையில் விடுவித்தார்.

இது இவ்வாறு இருக்க இச்சம்பவத்தினை ஆவா குழுவுடன் தொடர்பு படுத்தி வதந்திகள் பரப்பப்படுவதாகவும் இதில் எவ்வித உண்மையும் இல்லையென நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (மு-60)

## தொலைபேசி அழைப்பு...

அரச ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டலில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினால் நடத்தப்பட்ட இந்த கடத்தலுக்கான வலுவான ஆதாரங்களை சேகரித்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்வைத்துள்ள சான்றுகள் இந்தத் தொடர்பை வெளிப்படுத்தியுள்ளன.

2008 மே 22ஆம் திகதி இரவு கீத் நொயார் கடத்தப்பட்ட தகவலை, அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷவுக்கு, 'தி நேசன்' இதழின் ஆசிரியராக இருந்த லலித் அழககோன் தொலைபேசி மூலம் தெரியப்படுத்துகிறார்.

இதையடுத்து, அன்று இரவு 11.36 மணியளவில், பொலிஸ் மா அதிபராக இருந்த ஜெயந்த விக்கிரமரத்னவை தொலைபேசியில் அழைத்துப் பேசினார் கோத்தபாய ராஜபக்ஷ.

அதன் பின்னர் அவர், இரவு 11.39 மணியளவில், முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார்.

அதற்குப் பின்னர், மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண 11.41 மணியளவில், இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் அமல் கருணாசேகரவுக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசிக்கு அழைப்பை எடுத்துள்ளார்.

அவர், கொழும்பில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் திரிபொலி முகாமுக்கு அழைப்பை எடுத்தார்.

அப்போது பிரிகேடியர் அமல் கருணாசேகரவின் தொலைபேசி இலக்கம், ஜாவத்தை பிரதேசத்தில் அவர் இருந்ததை காட்டுகிறது.

அதேவேளை, திரிபொலி முகாமின் தொலைபேசி இலக்கம் மல்வானையில் இருந்ததை காட்டுகிறது.

பிரிகேடியர் அமல் கருணாசேகரவின் தொலைபேசி இலக்கத்தில் இருந்து இரவு 11.48 மணியளவில், திரிபொலி முகாமின் கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் புலத்வத்தையின் தொலைபேசிக்கு எடுக்கப்பட்ட மற்றொரு அழைப்பும் பதிவாகியுள்ளது.

அப்போது அவரும் மல்வான பிரதேசத்தல் இருந்தார் என்பதை தொலைபேசி பதிவுகள் உறுதி செய்துள்ளன. நொயார் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இடமே அதுவாகும்.

இந்த அழைப்பின் பின்னரே நொயார் விடுவிக்கப்பட்டார். இந்த ஆதாரங்களை மறுக்க முடியாது.

மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர கைது செய்யப்பட்டுள்ளது இந்த விசாரணைகளில் முக்கிய திருப்பம்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அவர் அளிக்கப் போகும் வாக்குமூலத்தில்தான் இந்த விசாரணைகளின் எதிர்காலம் தங்கியுள்ளது. இந்த ஆதாரங்களை அவரால் மறுக்க முடியாது. (மு-1)

## அரசாங்கத்தை கண்டி...

தொடர்பான பிரச்சினை மற்றும் காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பில் எந்த விதமான முனனேற்றங்களும் இன்றி அரசாங்கம் செயற்படுவதும் கண்டிக்கத்தக்க விடயமென குறிப்பிட்ட அவர்,

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கு நீதி கோரி தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மேற்கண்டவாறு குறிப்பி ட்டார்.

அத்தோடு, அண்மையில் பூசா தடுப்பு முகாமில் இருந்து விடுதலையான தமிழ் அரசியல் கைதியொருவர், காணாமல் போனவர்கள் தடுப்பு முகாம்களில் சுயநினைவின்றி காணப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். இவ்விடயத்தை சுட்டிக்காட்டிய சித்தார்த்தன், அரசாங்கம் இது குறித்து பேசாமல் இருப்பது கண்டிக்கத்தக்கதென்றும், இவ்விடயத்தின் அடிப்படையில் விரைவில் கலந்துரையாடி காத்திரமான நடவடிக்கைகளை எடுப்போம் என்றும் மேலும் குறிப்பிட்டார். (மு-1)

## கலாஓயா...

பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையின் காரணமாக கலாஓயாவின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால், எலுவாங்குளம் குரோஸ்வே பிரதேச பாதையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சப்பத்து பாலம் இரண்டு அடி உயரத்துக்கு நீரில் மூழ்கியுள்ளது.

கொழும்பு- மன்னார், புத்தளம்-மன்னார், கற்பிட்டி-மன்னார் ஆகிய ஊர்களுக்கு பயணிக்கும் பயணிகள் பஸ் வண்டிகள் இந்த வழியில் பயணிக்கின்றன. இந்த வழியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதனால், புத்தளம்-அநுராதபுரம் பாதை மற்றும் புத்தளம்-நொச்சியாகம ஓயாமடுவ தந்திரிமலை ஊடாக மன்னார் செல்லும் பாதை என்பன பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (மு-1)

## தமிழ் மக்கள் பேரவை...

களின் கவனத்தை ஈர்ப்பதற்கான அத்தனை ஏற்பாடுகளும் திட்டமிட்டு வருவதாக பேரவை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேபோல வடக்கு மாகாணத்தில் நடைபெறும் இளைஞர் மாநாட்டைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலும் இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கான முத்தாய்ப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றும் பேரவைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இளைஞர் மாநாட்டுக்கான விசேட செயலணியில் மதத்தலைவர்களும் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

## புலம்பெயர் உறவுகளை...

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் நான்கு நாள் ஓய்வு எடுப்பதற்காகவும் சித்த வைத்திய சிகிச்சைக்காகவும் நெல்லை மாவட்டத்தின் ஆழ்வார் குறிச்சிக்கு நேற்று காலை சென்றார். பின்னர் அவர் அருகில் உள்ள குற்றாலம் நிகழ்ச்சிக்காக சென்றார்.

அப்போது அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட முதல்வர் விக்னேஸ்வரன்,

இலங்கையில் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் ஆளுங் கட்சிக்கு சாதகமாக இல்லை. இதனால் ஆட்சியில் கூட்டணியில் உள்ள இரு கட்சிகளும் ஒன்றை யொன்று குறை கூறி வருகிறது. 2020 வரை ஆட்சியை கொண்டு செல்ல பிரதமரும் ஜனாதிபதியும் முயன்று வருகின்றனர். தமிழர்களின் உரிமைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது அவர்களது விளை நிலங்கள் அரசே அபகரித்து சிங்களர்களுக்கு வழங்குகிறது. இதனால் தமிழ் மக்கள் வீடுகளை, விளை நிலங்களை இழந்து தவிக்கும் நிலை உள்ளது, அவர்களுக்கு அதனை பெற்றுத் தரும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். வடக்கு கிழக்கு மாகாண மீனவர்களுக்கு மீன்பிடி உரிமையும் பறிபோகிறது, தெற்கிலிருந்து சிங்களவர்களை அழைத்து வந்து மீன்பிடிக்க செய்கின்றனர். இவை அனைத்தையும் சரி செய்ய மாகாணங்களிற்கான அரசியல் அதிகாரம் போதுமானதாக இல்லை. 1987இல் கிடைத்த அரசியல் அதிகாரம் போதுமானதாக இல்லை. அடுத்தடுத்து இயற்றப்பட்ட சட்டங்களால் அந்த உரிமையும் பறிபோய்விட்டது. அரசு அதிகாரிகளே மாகாண அரச அதி காரத்தின் கீழ் இல்லை, வடக்கு மாகாண பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ள 1.5 இலட்சம் ராணுவ வீரர்களை அப்புறப்படுத்த மறுக்கிறது. விளைநிலங்கள், கட்டிடங்கள் அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை அரசுக்கும், இந்தியாவுக்குமான உறவு நெருக்கமானதாக தெரியவில்லை. ஆனால் இலங்கை அரசு சீனாவுடன் வெளிப்படையாக அதிக நெருக்கம் காட்டி வருகிறது. அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என தெரியவில்லை. வடக்கு மாகாணத்தில் மக்கள் தொகை கணிசமாக குறைந்து விட்டது. வெளிநாடு அகதிகளாக உள்ளவர்கள் மீண்டும் குடியேற்றப்பட வேண்டும். அதற்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும் இலங்கையில் தற்போது தனி நாடு கோரிக்கை இல்லை மாநில சுயாட்சி வேண்டும் ஒரே இலங்கை என்பதே கோரிக்கையாக உள்ளது என்று தெரிவித்தார். (ம)

## 3 லட்சம்...

யளவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் 3 இலட்சம் கையொப்பம் அடங்கிய கோவைகள் கையளிக்கப்படும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார். (மு-1)

## சம்பந்தனுக்கு எதிரான...

எதிர்க்கட்சி தெரிவிததுள்ளது.

இது தொடர்பில் நீண்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

நாடாளுமன்ற அடுத்த கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படும் தினம் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அடுத்த மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகின்ற நாடாளுமன்ற கூட்ட தொடரின் போது, எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என ரஞ்சித் சொய்சா குறிப்பிட்டுள்ளார். (மு-1)


### காணவில்லை

Pocket Dog (பொக்கற் டோக்) கறுப்பு நிற நாயை நேற்று முன்தினம் (14.04.2018) இல் இருந்து காணவில்லை. சீனியர் லேன், கே.கே.எஸ் றோட், சிவப்பிரகாசம் றோட், கலட்டி அம்மன் றோட் ஆகிய பிரதேசங்களுக்குள் தவறிச் சென்றிருக்கலாம் என எண்ணுவதால் கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(சன்மானம் வழங்கப்படும்)

இல. 826/7, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 0752274509

(3643)




யாழ் நகர் மைய றோட்டறிக்ட் கழகத்தினரால் யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் தூரத்திலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கும் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மாணவர்களுக்குமான துவிச்சக்கர வண்டியினை யாழ் நகர் மைய றோட்டறிக்ட் கழக தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்...

-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## பிரத்தியேக வகுப்பு

A/L பொறியியல் தொழில்நுட்பவியல் பாடமானது பல்துறை பட்டயப் பொறியியலாளரினால் (Charted Engineer) பிரத்தியேகமாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும். (3626)

**தொடர்பு: 0752087288**

## பிரத்தியேக வகுப்புக்கள்

**A/L 2019, 2020**

இணைந்த கணிதம் மற்றும் Grade 11 கணிதம் என்பன பிரத்தியேகமாகக் கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு - 0778324002 (3639)

# பாராட்டி

## வாழ்த்துகின்றோம்

## பா.சாந்தரூபன்

(யோகா, தற்காப்புக் கலை மற்றும் பாரம்பரிய கலை ஆசான்)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கௌரவ அங்கஜன் இராமநாதன் அணியின் ஊடாக யாழ்.மாநகர சபை உறுப்பினராக **பா.சாந்தரூபன்** அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர். K.B.S Engineers நிறுவனத்தின் பணிப்பாளரும் யோகா, தற்காப்புக்கலை மற்றும் பாரம்பரியக் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆசானும் சமூக சேவகருமாவார். இவருடைய சேவை மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
யோகக்கலை மாணவர் சமூகம்.

(3629)

# Techno World

(வெலிங்டன் சந்தி - லிங்கன் கூல்பார் அருகாமை- யாழ்)

## A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2020 மாணவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

A/L 2019 மாணவர்களுக்கு முதல் 2 தவணைப் பாடங்களும், Paper Class.

2018 மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (15 பேப்பர் வகுப்பு - 1 கிழமைக்கு)

**நாள் வகுப்பு**

இன்று (16.04.2018) திங்கட்கிழமை 10.00 மணி

**தொடர்பு - 0770175346**

(C-2243)

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் **வடமாகாண சாரதி தெரிவு** பரீட்சையை முன்னிட்டு 4 நாட்கள் தொடர் பயிற்சி **வகுப்பு**

**நாள் கட்டணத்துடன்**

இன்று முதல் திங், செவ், புதன், வியாழன் 4.00 pm - 6.00 pm

**முகாமைத்துவ உதவியாளர் (MA)**

**கோலாசிற்றி**

234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 843 5224

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3 - 5 DAYS

UK - 550*/= Kg

கனடா - 1050*/= Kg

தொடர்புகளுக்கு: **0768226240**

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1982)

## விபூதி விற்பனைக்கு

கோயில்களில் எடுக்கப்படும் தீச்சட்டிக்குப் போடும் **விபூதியினை** எம்மிடம் மலிவான விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப் பூங்கா**

இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2567

(C-2201)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக
- அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
- கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

**அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டட தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

✆ 021 222 3536

(C-2222)

# அகிலா நகை மாடம்

## காக்கா கடைச்சந்தி, யாழ் வீதி, கிளிநொச்சி.

**0212283559, 0763490023**

**அகிலாவின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**அட்ஷய திருதியை முன்னிட்டு தங்க நகைகளை முற்பதிவு மற்றும் கொள்வனவு செய்து தங்க நாணயம் ஒன்றினைப் பரிசாக வென்றிடுங்கள்.**





**கிளை: நவீனா நகை மாடம்**

**இல.191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(C-2223)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.